விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 35 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (07.08.2012) | பக்கங்கள்: பதினாறு

புகைத்தலை தவிர்ப்போம்

# இஸட் புள்ளி விவகாரத்துக்கு இறுதி முடிவு எட்டப்படும் வரை பல்கலை அனுமதி இல்லை

## பல்கலை கழக மானியங்கள் ஆணைக்குழு

இஸட் புள்ளி கணிப்பீடு (Z) விவகாரத்திற்கு இறுதி முடிவு எட்டப்படும் வரையில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உச்ச நீதிமன்றத் திடம் உறுதியளித்துள்ளது.


இஸட் புள்ளிகள் விவகாரத்திற்கு தீர்வொன்று எட்டப்படும் வரையில் அதனை இடைநிறுத்துமாறு உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ள நிலையில்

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பணியானது பொதுவாக ஒவ்வொரு வருடத்திலும் ஒக்டோபர் மாதத்தில் இடம்பெறுவதுடன், இந்த ஆண்டிலே அப்பணியை ஒக்டோபர் மாதத்தின் நடுப்பகுதியில் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ளதாகவும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பாக உச்ச நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க இஸட் புள்ளிகள் தொடர்பாக 02

**மட்டக்களப்புக் கடலில் அத்துமீறி மீன்பிடி:**

# கைதான 37 சீன மீனவர்களை விடுவிக்க கோருகிறது பெய்ஜிங்



சிக்கிய சீன மீன்பிடி கப்பல்

இலங்கைக் கடற்படையினரால் மட்டக்களப்பு கடல் பகுதியில் நேற்றுக் கைது செய்யப்பட்ட 37 சீன மீனவர்களையும் விடுவிக்குமாறு சீனா கோரியுள்ளது. இவ்வாறு சீன செய்தி ஸ்தாபனமான சின்ஹீவா நேற்றுத் தெரிவித்தது. மட்டக்களப்பிலிருந்து கிழக்கே சுமார் பத்து அல்லது பதினைந்து கடல்மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளை முன்வைத்து சீன மீனவர்களை விடுவிக்குமாறு பெய்ஜிங் கோரியுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் இரண்டு இழுவைப் படகுகளில் வந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த சீன மீனவர்களை ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர். 02

## பாக்.பாதுகாப்பு செயலாளர் இன்று இலங்கை விஜயம்

பாகிஸ்தான் நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் ஆஸிப் யாஸின் மாலிகி இன்று இலங்கை வருகின்றார்.

இவர் இலங்கைக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்றே பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலாளர் தலைமையிலான அந்நாட்டு இராணுவ உயர் அதிகாரிகள் இலங்கை வருகை தரவுள்ளதாக இராணுவப் 02

## அழுகிய பூண்டினை உலர்த்தி பொதியிட்டோர் சிக்கினர்

பாவனைக்கு உதவாத 41 ஆயிரம் கிலோகிராம் நிறைக்கு அதிகமான வெள்ளைப் பூடு தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி சுமார் 35 இலட்சம் ரூபாவென நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்தது. 02

# சாரதிகள் பயணிகளின் உயிருடன் விளையாடுவதை அனுமதிக்க முடியாது

**அனுமதி பெறாவிட்டால் ரூ.2 இலட். அபராதம் - சி.பி.ரத்நாயக்கா**

வீதி போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபா தண்டம் அறவிடவும் குறித்த பஸ்ஸை அரசுடமையாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சரவை பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு அடுத்த வாரம் இந்த பிரேரணைக்கு அனுமதி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் 02


## உயர்தர பரீட்சை நிலையங்களில் 24 மணி நேரக் கண்காணிப்பு

நேற்று ஆரம்பமான ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையோடு தொடர்புபட்ட சகல பரீட்சை நிலையங்களிலும் விடைத்தாள் சேகரிப்பு நிலையங்களிலும் 24 மணிநேரமும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இத்தகவலைப் பரீட்சைத் திணைக்களம் நேற்றுத் தெரிவித்தது. இக்குழுக்கள் நாடெங்கிலுமுள்ள கல்வி வலயங்களில் செயற்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே புஷ்பகுமார தெரிவித்தார். 02

## காவியுடைப் பயங்கரவாதமும் ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார் ஹக்கீம்

ஜனாதிபதி எவ்வாறு பயங்கரவாதத்தை ஒழித்தாரோ அதேபோன்று தற்போது காணப்படும் பயங்கரவாதத்தையும் ஒழிப்பதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான றவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் கூட்டம் சாய்ந்தமருதில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. 02



# தமிழர்களுக்கு சிங்களம்; சிங்களவர்களுக்கு தமிழ்

**ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு ஒரு பாடமாகிறது**

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிங்கள மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகவும் தமிழ் மாணவர்கள் சிங்களத்தை ஒரு பாடமாகவும் எடுக்கக்கூடிய நிலைமை விரைவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பாடசாலைகளில் இதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது" இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்கப்பாட்டுக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா குறிப்பிட்டார். இரு மொழி மற்றும் மும்மொழித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குப் பாடசாலைகளே சிறந்த அடித்தளம் என்பதால் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு 02

## மட்டு.ரயில் மோதி தந்தையும் மகனும் பலி

மட்டக்களப்பு - மாமாங்கம் ரயில் பாதை பகுதியில் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு சென்ற ரயிலில் மோதுண்டு தந்தையும் மகனும் உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை நாலரை அளவில் இவ்விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் கருவப்பங் கேணியை சேர்ந்த 02

**தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்**

# கம்பஹா நீதிமன்றில் வெடிகுண்டுப் புரளி

கம்பஹா நீதிமன்றத்தில் வெடிகுண்டு இருப்பதாக நேற்று திங்கட்கிழமை காலை கூறப்பட்ட தகவல்கள் வெறும் வதந்தி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பஹா நீதிமன்றத்தில் வெடிகுண்டு காணப்படுவதாக 119 என்ற பொலிஸ் அவசர சேவை தொலைபேசிக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து நீதிமன்றத்திலிருந்து பொதுமக்களை அதிகாரிகள் வெளியேற்றினர்.

அத்துடன் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் 3 மணித்தியாலங்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது வெடிகுண்டு எதுவும் மீட்கப்படவில்லை. இதன் பின்னர் நீதிமன்றம் தனது வழமையான செயற்பாடுகளை முன்னெடுத்தது.

# கடந்த ஒரு வருட காலபெற்றோல் கொள்வனவு குறித்த விசாரணை

சிங்கப்பூர் கம்பனியொன்று தரங்குறைந்த எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியதால் ஏற்பட்ட பாரிய பிரச்சினைகளையடுத்து சம்பந்தப்பட்ட பெற்றோலிய பதிவுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த வருடம் ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து கடந்த மாதம் 31 ஆம் திகதி வரையான ஒருவருட காலத்தினுள் பெற்றோலிய கூட்டுத்தாபன சகல அவசர கொள்வனவுகள் மற்றும் கையிருப்பு முகாமைத்துவம் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கை அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட வர்களுக்கு பெற்றோலிய வள அமைச்சர் சுசில்பிரேம் ஜயந் பணிப்புரைவிடுத்துள்ளார்.

## மட்டு.ரயில் மோதி...(தொடர்)

57 வயதான ஜோசப் அலோசியஸ் அவரது மகனான 35 வயதுடைய அலோசியஸ் ஸ்பெத ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

அதிகாலை வேளையில் நடைபெற்ற இச் சம்பவத்தினால் ஊரெங்கும் சோகம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஒரு சம்பவம் இப் பிரதேசத்தில் நடைபெற்றமை இதுவே முதல்தடவையாகும்.

## தமிழர்களுக்குச் சிங்களம்...(தொடர்)

அரசாங்கம் முன்வந்துள்ளது. சிங்கள மக்களுக்குத் தமிழ் மொழியையும், தமிழ் மக்களுக்குச் சிங்கள மொழியையும் கற்பிக்க வேண்டுமென்று நல்லிணக்க ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாகாண ரீதியில் மொழிக் கற்கை நெறி நிலையங்களை அமைக்கும் திட்டத்தின்கீழ் தேசிய மொழிகள் ஆணைக்குழு கிளி-நொச்சியில் தனது முதலாவது நிலையத்தை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இவ்விரு மொழிகளைக் கற்றுக் கொடுப்பதற்கு கிராம மட்டத்திலும் நகர மட்டத்திலும் மொழி கற்கை நெறி அமைப்புகளை ஏற்படுத்தி அவற்றுக்கு இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களை உள்வாங்கி அதன் மூலம் பிரத்தியேக வகுப்புகள் மற்றும் மாலை நேர வகுப்புகளை தொண்டர் அடிப்படையில் நடத்துவது என்றும் அவை மூலம் வயது வந்தவர்களுக்கும் இந்த மொழி அறிவைக் கற்றுக் கொடுக்க முடியும் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நம்பிக்கை கொண்டுள்ளார்.

கிளிநொச்சி இருமொழி கற்கை நெறி நிலையத்தில் மொழிகளைக் கற்றுக் கொடுப்பதற்காக 700 சிங்கள போதனாசிரியர்களுக்கு இப்போது பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பெரும்பாலான தமிழர்கள் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற காரணத்தினால் 30 சதவீதமான தமிழர்களுக்கு சிங்கள மொழியைப் புரிந்து கொள்ளவும் ஓரளவு சரளமாகப் பேசுவதற்கும் முடியும். ஆயினும் இந்த 30 ஆண்டுகால யுத்தத்தின் போது சிங்களவர்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு செல்வது கஷ்டமாக இருந்த காரணத்தினால் எங்கள் நாட்டின் 10 சதவீதமான சிங்களவர்களுக்கு மாத்திரமே தமிழ் மொழியை புரிந்து கொள்வதற்கும் ஓரளவு பேசுவதற்கும் முடியும் என்பது சமீபத்தில் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.மாகாண மொழி நிலையங்கள் தமிழர்களுக்கு சிங்களத்தில் பணிபுரிவதற்கும், சிங்களவர் களுக்கு தமிழில் பணிபுரிவதற்கும் ஓரளவு தேர்ச்சியைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை நிறை வேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாகாண மொழி கற்கை நெறி நிலையங்கள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இரு மொழிகளில் பாண்டித்தியம் பெறும் அளவுக்கு கற்றுக் கொடுப்பது அவசியம் இல்லை. அவர்களுக்கு தங்கள் பிரச்சினைகளை இலகுவாக எடுத்துரைத்து மற்றவர்களுக்கு புரிய வைக்கும் அளவுக்கு மொழி அறிவு இருந்தால் போதும் என்ற இலக்கை நோக்கி செயற்பட வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

## காவியுடைப்...(தொடர்)

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது தலைதூக்கியிருக்கும் இந்தப் பயங்கரவாதமானது வட, கிழக்கில் இருக்கும் முஸ்லிம்களை விட வட, கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்களை மிக மோசமாக பாதித்துள்ளது.

நிம்மதியாக பள்ளிவாசல்களில் தொழமுடியாத நிலைமை உருவாகியுள்ளது. இந்த ரமழான் மாதத்தில் கூட முஸ்லிம்கள் கூட்டாக சேர்ந்துகொண்டு ஒரு வீட்டில் தொழமுடியாத ஒரு அச்ச சூழ்நிலையை இந்தப் பயங்கரவாதம் தோற்றுவித்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

## சாரதிகள் பயணிகளின்...(தொடர்)

அவர் கூறினார். தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் வாகன சாரதிக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கவும் புதிய சட்டத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் கூறினார்.

சாரதிகளுக்கு மக்களின் உயிருடன் விடையாட இடமளிக்க முடியாது. அத்தகைய சாரதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தகைய வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யவும் தயங்கப் போவதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடபடும் பஸ்களுக்கெதிரான தண்டனை மற்றும் தண்டப்பணம் போதுமானதல்ல. தவறு செய்யும் பஸ் உரிமையாளர்கள் தண்டப் பணத்தை செலுத்தி மீண்டும் பஸ் சேவையில் ஈடுபடுவதாக கூறிய அமைச்சர், அதனாலேயே தண்டனையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறினார்.

அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி சிலர் அனுமதிப்பத்திரமின்றி பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முயல்கின்றனர்.

அதற்கு தான் தலை சாய்க்கப் போவதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறந்த தனியார் பஸ் சேவையொன்றை முன்னெடுப்பதற்காக தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர் விரைவில் அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## இஸட் புள்ளி விவகாரத்துக்கு...(தொடர்)

உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயற்பட தவறியுள்ளதாக சுட்டிக்காட்டியதுடன், அதிகாரிகளின் இவ்வாறான தவறுகள் காரணமாக் இந்நாட்டுப் பரீட்சை முறைமை தொடர்பாக மாணவர்கள் நம்பிக்கை இழப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு தனித்தனியாக இஸட் புள்ளிகள் கணிக்கப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும் என தெளிவாக நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தேசிய மற்றும் மாவட்ட ரீதியிலான புள்ளிகளை கணிப்பிடும்போது மேற்படி இரண்டு பிரிவினரையும் ஒரே பிரிவினராக கவனத்திற்கொண்டு செயற்பட்டுள்ளதாகவும் அதன்மூலம் பாரிய தவறிழைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின் அதுபற்றி சட்டமா அதிபர் ஊடாக மனு ஒன்றினை சமர்ப்பித்து அதுபற்றி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அவ்வாறு செய்வதற்கு தவறியுள்ளதாகவும் பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் வெளியான இஸட் புள்ளிகள் மூலம் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மாணவர்கள் சிலர் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த போது இவ்வாறு குறிப்பிட்ட பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயற்பட்டுள்ளதா என சட்டமா அதிபரிடம் கேள்வி எழுப்பினார்.

அதன்போது வழக்குத் தீர்ப்பு தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பூரண விளக்கம் இருக்கவில்லை என சட்டமா அதிபர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அண்மையில் வெளியான இஸட் புள்ளிகள் மூலம் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு தீர்வு காணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் சட்டமா அதிபர் பாலித்த பெர்ணாந்து தெரிவித்தார்.

அவ்வாறான தீர்வு ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். எவ்வாறாயினும் மாணவர்களை இரண்டு பிரிவினராக கருதி இஸட் புள்ளிகள் வெளியிடப்படும் பட்சத்தில் அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதில் சிக்கல் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் வலியுறுத்தினார்.

அண்மையில் வெளியான இஸட் புள்ளிகளின் தேசிய மட்டத்திலான மாவட்ட மட்டத்திலான நிலையை (Rank) இரத்துச் செய்யுமாறு மாணவர்கள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. அதன்படி மேற்படி மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிரானி பண்டாரநாயக்க, கே. ஸ்ரீபவன், எஸ்.ஐ.இமாம் ஆகிய உச்சநீதிமன்ற நீதியரசர்கள் குழு முன்னிலையில் மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பழைய பாடத்திட்டத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றிய 33 மாணவர்கள் மேற்படி மனுவைத் தாக்கல் செய்தனர். பரீட்சைகள் ஆணையாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்டோர் இதில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பழைய இஸட் புள்ளிகள் மற்றும் புதிய இஸட் புள்ளிகள் என்பவற்றின் மூலம் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக நியாயமான இஸட் புள்ளிகள் திட்டமொன்றினை அறிமுகம் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு மேற்படி மனுவின் மூலம் உச்சநீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது.

தமக்கு முன்னர் கிடைக்கப் பெற்றிருந்த பல்கலைக்கழக அனுமதிக்கான சந்தர்ப்பம் பின்னர் வெளியிடப்பட்ட இஸட் புள்ளிகள் மூலம் வழங்கப்படுவதில்லை எனவும், அதன் மூலும் தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும், மனநிலை தாக்கத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் மேற்படி மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் மூலம் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே இஸட் புள்ளிகள் விவகாரத்திற்கு நியாயமான தீர்வொன்று எட்டப்படும்வரை பல்கலைக்கழக அனுமதி உள்ளிட்ட நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு மேற்படி மனுவின் மூலம் மாணவர்கள் உச்ச நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

சட்டத்தரணி சாலிய பீரிஸ் மனிதர்கள் சார்பாக ஆஜரானார்.

## உயர்தர பரீட்சை...(தொடர்)

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இசற் புள்ளிச் சிக்கல்களால் பாதிக்கப் பட்டதென்று கூறும் மாணவர்கள் 574 பேர் இம்முறை பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்துள்ளனர்.

124 பாட விதானங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. 52 இலட்சம் வினாத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன.

## அழுகிய பூண்டினை...(தொடர்)

கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கமைய, அமைச் சரின் பணிப்புரையின் பேரில் நுகர்வோர் அதிகார சபை நேற்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப் பின் போதே பாவனைக்குதவாத வெள்ளைப் பூடு கைபற்றப்பட்டுள்ளது. இதன்போது, 22, 23 மற்றும் 24 கிலோகிராம் நிறை கொண்டதாக அடைக்கப்பட்ட 1800 பக்கற்றுக்களை நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

## பாக்.பாதுகாப்பு செயலாளர்...(தொடர்)

பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிக சூரிய கூறினார்.

இலங்கை இராணுவம் ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் சர்வதேச மாநாடு. "நிலையான சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி" என்ற தொனிப் பொருளில் நாளை கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமாகவுள்ளது. புனர் நிர்மாணம், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, மீள் ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் ஆகிய ஐந்து முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ள இந்த சர்வதேச கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் பாதுகாப்புச் செயலாளர் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

## கைதான 37 சீன...(தொடர்)

ஏற்கனவே இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித்த பலநூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டும், இராஜதந்திரக் கோரிக்கையின் அடிப்படையிலும் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சீன மீனவர்கள் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டு திருமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் 200 கடல் மைல்களுக்கு அப்பால் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை மீன்பிடி அமைச்சுடன் சீனா செய்துள்ளது என்றாலும் சர்வதேச கடலெல்லை சட்டத்தை மீறி இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்த குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 37 சீன மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்று இரவு கைது செய்து திருகோணமலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், மீனவர்கள் பிரச்சினையை சட்டரீதியில் கையாண்டு முடிந்தளவு விரைவில் அவர்களை விடுதலை செய்யுமாறு சீன தூதரகம் இலங்கையிடம் கோரியுள்ளது.

# காமினியின் பிரசார தந்திரோபாயங்கள் குறித்து ரணில் தகவல் வழங்கவில்லை

## சந்திரிகா

ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸாநாயக்கவின் பிரசார தந்திரோபாயங்கள் குறித்த ரகசிய தகவல்களை 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்க தனக்கு வழங்கியதாக கூறப்படுவதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுத்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது தன்னை ரணில் விக்கிரமசிங்க சந்தித்து, ஐ.தே.க. வேட்பாளர் காமினி திஸாநாயக்கவின் பிரசார தந்திரோபாயங்கள் குறித்த ரகசிய தகவல்களை வழங்கியதாக தற்போதைய அமைச்சரவையின் சிரேஷ்ட அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தமை தொடர்பான செய்திகளை சந்திரிகா குமாரதுங்க வியப்புடன் அவதானித்துள்ளார் என சந்திரிகா குமாரதுங்கவின் அலுவலகம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திஸாநாயக்கவினதோ அல்லது ஐ.தே.கவினதோ பிரசார தந்திரோபயங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் எந்தத் தகவலையும் வழங்கவில்லை எனவும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்ததாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்படுள்ளது.

தான் பிரதமராக பதவியேற்ற போது, அப்பதவியிலிருந்து விலகிச் செல்லும் பிரதமர் என்ற வகையில் தன்னை ரணில் விக்கிரமசிங்க சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தாகவும் அதேபோல் பிரதமர் பதவியிலிருந்து விலகி நிறைவேற்றதிகார ஜனாதிபதியான போதும் தனக்கு ரணில் வாழ்த்து தெரிவித்ததாகவும் சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். அதேபோல் ஜனாதிபதி பதவியிலிருந்து டி.பி.விஜேதுங்க ஓய்வுபெற்ற போதும் தான் அவருக்குப் பிரியாவிடை வாழ்த்துத் தெரிவித்து தெரிவித்தாகவும் இது பண்பான மனிதர்களின் வழக்கமான நடைமுறையாகும் எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

# வற்றிய கிணற்றிலிருந்து இரு இலங்கை அகதிகள் சடலமாக மீட்பு


தமிழ்நாடு-திண்டுக்கல் அருகே அமைந்துள்ள தொட்டானூத்து அகதி முகாமில் வற்றிய கிணற்றில் இருந்து ஒரு இலங்கை தமிழ் அகதியும் அவரது இரு பிள்ளைகளும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் அருகே ரெட்டியாபட்டியில் உள்ள வறண்ட கிணற்றில் இருந்து உடல் கருகிய நிலையில் இம்மூன்று சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அகதியான 35 வயதுடைய கலைச்செல்வி, அவருடைய 12 வயதுடைய மகன் வினோத் மற்றும் 7 வயதுடைய மகன் கௌதம் ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இம்மூவரும் கொலை செய்யப்பட்டார்களா அல்லது தற்கொலை செய்து கொண்டார்களா என பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யுத்தம் மற்றும் உள்நாட்டு அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து இந்தியாவின் தமிழகத்தில் உள்ள பல்வேறு அகதி முகாம்களிலும் வாழும் இலங்கையர்கள் பலதரப்பட்ட வாழ்வியல் கஷ்ரங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான வன்முறைகள் இவ்வாறான அகதி முகாம்களில் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்றாடலில் அலைந்து திரியும் கட்டாக்காலி ஆடுகளால் பக்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த ஆடுகள் பக்தர்கள் கொண்டு வரும் பூக்கள் மற்றும் உணவுப் பொருட்களை பறித்து உண்ண முற்படுவதாலும், சிறு பிள்ளைகளுக்கு கொம்புகளால் இடிக்க முற்படுவதாலும் பக்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (படம் : வலிகாமம் நிருபர்)

## எஜமானர் வீட்டில் கொள்ளை:

# தப்பி வந்த இலங்கை பணிப் பெண் விமான நிலையத்தில் வைத்து கைது

மலேசியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தைவந்தடைந்த ஏ.கே.1267 என்ற விமானத்தில் பயணித்த இலங்கை பணிப்பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவில் தான் பணிபுரிந்த வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்றில் தொடர்புடைய தான குற்றச்சாட்டிலேயே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் பணிபுரிந்த வீட்டு உரிமையாளர் கொள்ளைச் சம்பவம் குறித்து மலேசிய தூதரகத்திற்கு அறிவித்ததன்படி அப்பெண்ணை மலேசியாவிற்கு அனுப்பிய குருநாகல் பிரதேச வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்றுமுன்தினம் இலங்கை வந்த குறித்த பணிப் பெண் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து 24இ லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# வவுனியா நகரிலுள்ள மலசலகூடத்தை பாவனைக்கேற்றதாக அமைக்க வேண்டும்

## பயணிகள் கோரிக்கை

வவுனியா நகர மத்தியில் உள்ள பொது மலசலகூடங்கள் மக்கள் பாவனைக்கு ஏற்ற வகை [illegible] அமைக்க வேண்டும் என நகரசபையிடம் பயணிகளும் அப்பகுதி வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாவில் தற்போது பொது மக்களின் பாவனைக்கு ஏற்ற வகையில் பொது மலசலகூடங்கள் காணப்படவில்லை. மக்கள் குறைவாக இருந்த காலப்பகுதிகளில் வவுனியா நகரத்தில் 5 மலசலகூடங்கள் இருந்தபோதிலும் தற்போது வவுனியா நகருக்கு அதிகளவானவர்கள் வந்து போகும் நிலையில் 2 மலசலகூடங்களே காணப்படுகின்றன.

நகரமத்தியில் இருக்கும் பொது மலசலகூடத்தில் பணம் பெறுவது தொடர்பில் எவ்வித அறிவித்தலும் காணப்படாத நிலையில் அங்கு நிற்கும் சிலர் அதிகளவான பணத்தை அறவிடுகின்றனர். இதனால் ஏற்படும் அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு இவற்றை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு விஸா கட்டுப்பாட்டை தளர்த்துமாறு இலங்கை கோரிக்கை

இந்தியாவில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கான விஸா கட்டுப்பாட்டை தளர்த்துமாறு இந்தியாவிடம் இலங்கை கோரியுள்ளதாக இந்தியாவின் வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த அமைச்சர் ஆனந்த் சர்மா, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து தனது இலங்கைக்கான விஜயத்தின் நோக்கம் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

தனது விஜயத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவிடம் தெரிவித்த அமைச்சர் ஆனந்த் சர்மா, மருந்துப் பொருட்கள் மற்றும் பொறியியல் பொருட்கள் நிலையம், வாகனங்களுக்கான சிறப்பு பொருளாதார வலயம் ஆகியவற்றை அமைப்பதற்கு இந்தியா தீர்மானித்துள்ளது எனவும் கூறினார்.

விஸாக் கட்டுப்பாட்டை எளிமைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் இலங்கையும் இந்தியாவும் ஈடுபட்டுள்ள நிலையில்,

விஸாக் கட்டுப்பாட்டை எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கையில் இருநாட்டு வர்த்தகச் செயலாளர்களும் ஏற்கெனவே ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சர் ஆனந்த் சர்மா தெரியப்படுத்தியுள்ளளார்.

இந்தியாவுக்கான விஜயமொன்றை தான் கூடிய விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக ஆனந்த் சர்மாவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதாகவும் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, சுங்க அனுமதி தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா கலந்துரையாடியுள்ளார்.

# கல்கிஸையில் விபச்சார விடுதி முற்றுகை

கல்கிஸ்ஸை - சுமனாராம வீதியில் ஆயுர்வேத நிலையம் என்ற பெயரில் இயங்கிவந்த விபச்சார விடுதி ஒன்றை கல்கிஸ்ஸை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்றுமுன்தினம் மாலை இவ்விபச்சார விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது நிலையத்தை இயக்கி வந்ததாகக் கூறப்படும் ஆண் ஒருவரும் விபச்சார தொழிலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 4 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் கம்புருகல, களுத்துறை, கட்டுபிலகொல்ல மற்றும் வஸ்கொன ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# கட்டுத் துவக்கால் சுட்டுக்கொலை

ஹொரவபொத்தான-முக்கரவெவ பகுதியில் ஒருவர் கட்டுத்துவக்கால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணி பிரச்சினை தொடர்பில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்தர்க்கம் முற்றியதை அடுத்து இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இத்துப்பாக்கிச்சூட்டில் 28 வயதுடைய ஆதம்பாவா மிஹிலார் என்ற இளைஞன் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# சுற்றுலா பயணிகள் மீது குளவிகள் தாக்குதல்

சிகிரியாவிற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட 17 பேர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இருவரும் அடங்குவாதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மலேசியா மற்றும் பிரித்தானிய நாட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

# இன்றைய இராசி பலன் (07.08.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 23 ஆம் நாள்**

**செவ்வாய்க்கிழமை (ஆடிச்செவ்வாய்)**

**நட்சத்திரம்** : ரேவதி பின்னிரவு 3.44 வரை அதன் பின் அச்சுவினி
**திதி** : பஞ்சமி காலை 9.28 வரை அதன்பின் சஷ்டி
**சுபநேரம்** : 10.34 - 12.04 **இராகுகாலம்** : 3.04 - 4.34

**மேடம்** : மனக்குழப்பம், வீண்முயற்சி, வருவாய் குறைவு
**இடபம்** : காரியசித்தி, பணப்புழக்கம், தெய்வ அனுகூலம்
**மிதுனம்** : தொழில்விருத்தி, முயற்சி பலிதம், பிறருக்கு உதவுதல்
**கடகம்** : பூமி இலாபம், பூர்வீகசொத்து சேர்க்கை, சகோதர உதவி
**சிங்கம்** : கடன்சுமை, மனக்கஷ்டம், அயலவர் தொல்லை
**கன்னி** : மகிழ்ச்சியான செய்தி, குடும்பசுகம், விருந்துபசாரம்
**துலாம்** : உடல்நிலை பாதிப்பு, வீண் விரயம், போக்குவரத்தில் கவனம்
**விருச்சிகம்** : புதுமுயற்சி, அறிவு விருத்தி, பாக்கியசுகம்
**தனுசு** : மனை சேர்க்கை, ஆன்மீக சிந்தனை, தேகசுகம்
**மகரம்** : பொருள் இலாபம், தொழில் உற்சாகம், பெரியோர் மதிப்பு
**கும்பம்** : போசன சுகம், குடும்ப நன்மை, வழக்கு விவகாரம் வெற்றி
**மீனம்** : மனப்பயம், நரம்பு ரோகம், அதிக பிரயாசம்.

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**


## ஆஸி. செல்ல முயன்ற 41 இலங்கையர் வென்னப்புவவில் கைது

அவுஸ்திரேலியாவுக்குச் செல்லத் தயாராகவிருந்த 41 இலங்கையர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். அவுஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் செல்லும் நோக்கில் நாட்டின் வேறு பகுதிகளிலிருந்து வந்து வென்னப்புவ ஹோட்டலொன்றில் தங்கியிருந்த வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துச் சம்பந்தப்பட்ட ஹோட்டலைச் சுற்றிவளைத்த பொலிசார் இவர்களைக் கைதுசெய்யதனர். கைது செய்யப்பட்டவர்களில் 37 பேர் தமிழர்கள் ஏனைய நால்வரும் முஸ்லிம்களாவர்.

## மட்டக்களப்பு கடற்பரப்பில் 37 சீனர்கள் கைது

இலங்கை கடற்பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்த 37 சீனர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களுடன் இரண்டு இலங்கையர்களும் இருந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்புக் கிழக்குப் பிராந்தியக் கடற்பரப்பிலேயே இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இவர்களனைவரும் திருகோண மலை துறைமுகப் பகுதிக்கு அழைத்துச்

# "பிறிக்"




BRIC என்பது ஒரு புதிய பொருளாதாரக் கூட்டமைப்பாகும். இதன் நடவடிக்கைகளால் 2050 ஆம் ஆண்டளவில் இது உலகில் முதலாவது இடத்தைப் பிடிக்கும் எனவும் G7 நாடுகள் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்படும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த புதிய கூட்டமைப்பு தமது நாடுகளுக்கு இடையே உள்ள கொடுக்கல் வாங்கல்களை தமது நாணயத்திலேயே செய்யத் தீர்மானித்துள்ளன.

இந்த புதிய கூட்டமைப்புக்கான பேச்சுவார்த்தைகள் செப்டெம்பர் 2006இல் நியூயோர்க் நகரத்தில் ஆரம்பமானது. ரஷ்யாவில் 16.06.2009இல் உத்தியோகபூர்வ சந்திப்பு நடந்தது. ஆகஸ்ட் 2010இல் தென்னாபிரிக்காவும் உத்தியோகபூர்வமாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. தற்பொழுது BRIC என அழைக்கப்படுகின்றது. சீனாவில் 2011 ஏப்ரலில் நடந்த மகாநாட்டில்


தென்னாபிரிக்காவும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரேஸில், ரஷ்யா, இந்தியா, சீனா என்பன மற்ற நாடுகளாகும். சீனா தற்பொழுது உலகில் இரண்டாவது அபிவிருத்தியடைந்த நாடாகத் திகழ்கிறது. இந்தியா 10ஆவது இடத்தையும் பிரேசில் 7ஆவது இடத்தையும் ரஷ்யா 11ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. சீனா உலகத்தில் பெரிய ஏற்றுமதி நாடாகவும் உலகிலுள்ள கனிம வளங்களை இறக்குமதி செய்யும் இரண்டாவது பெரிய நாடாகவும் திகழ்கின்றது. கடந்த பத்து வருடங்களில் G7 நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 20 வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகின்றது. BRIC நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 100 வீதத்திற்கு அதிகமாக காணப்படுகின்றது. இந்தோனிசிய நாடுகளில் 147 வீத வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றது. இந்த நாட்டில் நேட்டோ படைகளின் இராணுவத் தளங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. உலகில் அதிக அளவு வெளிநாட்டு முதலீட்டை பெற்றுக்கொண்ட நாடாக சீனா திகழ்கின்றது. இது 185 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பிரேசிலில் 48 பில்லியன் அமெரிக்கா டொலராகும். ரஷ்யாவில் 43 பில்லியன் அமெரிக்கடொலரும் இந்தியாவில் 24 பில்லியன் அமெரிக்க டொலரும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. உலகத்திலேயே மிகவும் கடன் பெறக்கூடிய இடமாக அமெரிக்கா காணப்படுகின்றது.

மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிக உதவி செய்த நாடாக சீனா திகழ்கின்றது. தற்போது உலகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சீனாவுடன் நாங்கள் தொடர்புகளை வைத்திருக்காவிட்டால் நாங்கள் பெரிய நெருக்கடியினைச் சந்திக்க நேர்ந்திருக்கும். கொழும்பிலே

**சி.குமாரலிங்கம்.**

ஆசியாவிலேயே மிகப்பெரிய தொலைத் தொடர்புக் கோபுரம் சீனாவினால் அமைக்கப்படுகின்றது. இதில் 50 பெரிய தொலைக் காட்சி நிறுவனங்களும் 50 வானொலிகளும் செயற்படும் என கூறப்படுகின்றது. சீனா ஒரு பெரிய ட்ரகன் என்றமிருகம் அது எழும்பும் பொழுது உலகத்தையே ஆட்டிப்படைக்கும் என்று நெற்போலியன் கூறியிருந்தார்.

# தெற்குக்கும் வடக்குக்கும் சமவாய்ப்பு வேண்டும்!



தென் பகுதி மக்களுக்கு கிடைக்கும் அனைத்தும் வட பகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என அனர்த்த முகா மைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருக்கிறார்.

இந்த நாட்டில் தென் பகுதி மக்களுக்கு கிடைக்கும் அனைத்து உதவிகளும் வசதிகளும் வட பகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும் அதுதான் எமது நிலைப்பாடு என கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரைத் தகடுகள் மற்றும் அனர்த்த நிவாரணப் பொருட்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் தற்போது இந்த பிரதேசத்தில் அரசினால் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடபகுதியில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது குறிப்பாக வறட்சிக்காக நாம் பத்தாயிரம் மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளோம் அத்தோடு குடிநீர் தேவைக்காகவும் ஒரு மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கியுள்ளோம் மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்ட மக்களுக்கும் நட்டஈடுகளை வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு 1800 கூரைத்தகடுகள் வழங்கப்பட்டதோடு மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கும் நான்கு பிரதேச செயலகங்களுக்கும் அனர்த்த காலங்களுக்கு தேவையான சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டன மேலும் பூநகரி பிரதேச செயலகத்திற்கு சுனாமி எச்சரிக்கை கருவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் ஹெட்டி ஆராச்சி கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீநிவாசன் ஆகியோர் உட்பட்ட அதிகாரி களும் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## தீவக விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

விளையாட்டு வீரர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் எமது பிரதேசத்தின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் வெளியே எடுத்து விளக்க வேண்டும் என யாழ். மாவட்ட எம்.பி. சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வேலணை ஈ.பி.டி.பி.அலுவலகத்தில் இணைப்பாளர் சின்னையா. சிவராசா (போல்) தலைமையில் நடைபெற்ற விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அலன்ரின் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோச னைக்கிணங்க யாழ் குடாநாட்டில் உள்ள விளையாட்டுக் கழகங்களை கட்டி யெழுப்பும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது. அதன் ஒரு கட்டமாக இன்றைய தினம் தீவக விளையாட்டுக் கழகங்க ளுக்கான விளையாட்டு உபகர ணம் கையளிக்கும் நிகழ்வு இடம் பெறுவதாக தெரிவித்ததுடன், விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும் கழகங்கள் விளையாட்டு நிகழ்வுகளை சிறந்த முறையில் முன்னெடுத்து விளை யாட்டுத்துறையில் முன்னேற்றம் காண வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

## மலேசியாவிலிருந்து வந்த இலங்கைப் பணிப்பெண் விமான நிலையத்தில் கைது

மலேசியாவிலிருந்து இலங்கையை வந்தடைந்த ஏ.கே.1267 என்ற விமானத்தில் பயணித்த இலங்கை பணிப்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசியாவில் குறித்த பெண் பணிபுரிந்த வீட்டில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்து மலேசிய தூதரகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டினை அடுத்து, அப்பெண்ணை மலேசியாவிற்கு அனுப்பிய வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஊடாக கட்டுநாயக்க பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்று (05) இலங்கை வந்த குறித்த பணிப்பெண் கைது செய்யப்பட்டு அவரிடம் இருந்து 24 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## உடுவில் கோட்டத்தில் 6 பாடசாலைகள் தெரிவு

உடுவில்

உடுவில் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவில் ஐயாயிரம் பாடசாலை அபிவிருத்திக்கு 6 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இத் திட்டத்திற்கு யாழ்.புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம், ஈவினை அ.த.க., ஏழாலை இசிதேன் த.க. பாடசாலை யாழ். மல்லாகம் கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை யாழ். ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை யாழ்.ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை என்பனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளின் பௌதீக வள அபிவிருத்திகாக தலா 5 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாறிவரும் நினைவு வெளியீடுகள்

யாழ்ப்பாண கலாசாரத்தில் ஒருவரின் மறைவிற்கு பின்னர் அவரின் 31ஆம் நிறைவு நிகழ்வின் போது நினைவு மலர் வெளியிடப்படுவது பாரம்பரியமாகப் பின்பற்றப்படுகின்றது. திதி நிர்ணயம் வெண்பாவிலும், வரலாறு அகவற்பாவிலும், புலம்பல் விருத்தப்பாவிலும் எழுதப்படுதல் மரபு.

இம் மரபு தற்போது மீறப்பட்டு வசன நடையில் எழுதப்படுவதும் உண்டு. எது எவ்வாறு இருப்பினும் மிகுந்த பொருட் செலவில் வெளியிடப்படும் இவ் வெளியீடுகள் அனேகமானோர்களால் படிக்கப்படாமலே கிடப்பில் போடப்படுகின்றன. உறவினர்கள் தங்கள் பெயர் இருக்கிறதா என்ற தேடலுடன் நிறைவடைகின்றனர்.

எனவே இந்நினைவு வெளியீடுகள் மற்றையோருக்கு பயன்படத்தக்கதாக இருக்க வேண்டும் என நினைப்பது தவறு இல்லை. இத்தகைய சிந்தனையில் அண்மைக் காலமாக நினைவு வெளியீடாக சில இலக்கியப் படைப்புக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வகையில் யாழ்ப்பாண மாட்டுவண்டிச் சவாரி (அமரர் சீனியர் கிருஸ்ணபிள்ளை நினைவு வெளியீடு).

புதுமைக் கவிதைகள் அமரர் பெரியார் சரவணை வெளியீடு (தொகுப்பு சித்தாந்தன் ரமேஸ் கேதீஸ்வரன்) நினைவில் இருந்து சொற்களுக்கு அமரர் ஆனந்தமயில் நினைவு வெளியீடு போன்ற வெளியீடுகளும் கவிஞர் சு.குணேஸ்வரனால் தொகுக்கப்பட்ட அம்மா தேர்ந்த கவிதைகள்.

பொன்னுத்துரை இராசம்மா நினைவு வெளியீடு வெளிநாட்டு கதைகள்- இராசையா தவமணி வெளியீடு கிராமத்து வாசம்.

குழந்தைப் பாடல்கள்- ம.சின்னத்தம்பி நினைவு வெளியீடு.

தேர்ந்த குறுங்கதைகள் போன்ற நூல்களையும் குறிப்பிடலாம்.

இதே போன்று பொருளாதார வசதியீனம் காரணமாக ஒரு நூலைத்தானும் வெளியிட முடியாமல் இருக்கின்ற நல்ல எழுத்தாளரின் நூல்களை தனது அன்புக்குரியவர்களின் நினைவாக வெளியிட்டு தமிழ் இலக்கிய உலகம் வளம் பெற உதவலாம்.

இதன் மூலம் அவர்கள் இலக்கியங்களின் ஊடாக அன்பானவர்களின் நினைவு பேணப்படும் அல்லவா? எனவே இத்தகைய பயனுள்ள முயற்சிகள் தொடர வேண்டும்.

**வேலணையூர் தாஸ்.**

# எல்லைகளை அடையாளம் காட்ட வலி.வடக்கு மக்களுக்கு அழைப்பு

(மாவிட்டபுரம்)

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மாவிட்டபுரம், பளைவீமன்காமம் தெற்கு, மாவிட்டபுரம் தெற்கு வீமன் காமம் வடக்கு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைப் பகுதியை அண்மித்த பகுதிகளில் உள்ள பற்றைக்காணிகள் துப்பரவாக்கல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளர்கள் துப்பரவாக்கற் பணிக்காக தங்களது காணிகளின் எல்லைகளை இனம் காட்டி உதவுமாறு பிரதேச செயலகத்தினர் மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட் நான்கு கிராம அலுவலர் பகுதிகளில் பற்றைக் காணிகளை துப்பரவு ஆக்கும் பணி இடம்பெற்று வருகின்றது. அந்தப் பகுதிகள் பற்றைக்காடக இருப்பதனால் கனரக வாகனங்களின் உதவியுடன் துப்பரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# ஐ.நா.உயர்மட்டக் குழு வருகிறது

அமெரிக்க ஆதரவு தீர்மானத்தை இலங்கையில் நிறைவேற்றுவது குறித்து இலங்கை அரசுக்கு ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதற்கு ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை சபை நிபுணர்கள் அடுத்த மாதமளவில் இலங்கை வரவுள்ளனர்.

இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளையின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டமையினாலேயே இந்த நிபுணர் குழுவின் வருகைக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுமதியளித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதற்கு முன்னர் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் வேண்டுகோளை வெளிவிவகார அமைச்சு மறுத்து வந்துள்ளது. இந்நிலையிலேயே ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான திட்டவரைபு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டிருந்தது. இதனடிப்படையில் இலங்கை அரசுக்கு உதவுவதற்காகவே இக்குழு இலங்கை வரவுள்ளது.

# உலக அஞ்சல் தின போட்டி

(மாவிட்டபுரம்)

உலக அஞ்சல் தினத்தினை முன்னிட்டு அஞ்சல் சேவையாளரிடையே பாட்டு பேச்சுப்போட்டி ஆகியன நடாத்தப்படவுள்ளன. போட்டிக்கான பாகுதிப் போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதியும் மாகாணமட்ட போட்டிகள் 30 திகதியும் இடம்பெறவுள்ளது.

இவ் அஞ்சல் ஊழியர்களுக்கிடையிலான கலாச்சாரப்போட்டியில் பாட்டுப்போட்டியானது விண்ணப்பதாரிகளால் தங்களுடைய திறமைக்கு ஏற்றப சுயமாக இயற்றிய பாடலையோ அல்லது கவிதையையோ பாடமுடியும். பேச்சுப் போட்டியில் பங்குபற்றும் போட்டியாளருக்கு தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

# மாணவர்களுக்கான போட்டிகள்

(மாவிட்டபுரம்)

வலிகமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இவ் ஆரம்பப் பிரிவினலுருக்கான போட்டிகளில் புரட்டாதி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிறுவர் அரங்கப்போட்டியும் 5ஆம் திக்தி புதன் கிழமை விரைவு கணிதத்திறன், திருக்குறள் போட்டி என்பன இடம்பெறவுள்ளன. 6ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆங்கிலப்பாடல் சிங்கள வினாடி வினா, வாய்ப்பாடு மனனம், பண்ணிசைப்போட்டி. ஆங்கில சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் மருதனார்மடம் இரமாநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக வலயக்கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

# வெற்றி பெற்ற மாணவர்கள்

(மாவிட்டபுரம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபையினரால் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்போட்டியில் பின்வருவோர் வெற்றி பெற்றனர்.

**கீழ்ப் பிரிவு:** முதலாம்இடம் -கஸ்தூரி பரமானந்தம் (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), இரண்டாமிடம் -மேரி ஜெனசியா (பாசையூர் சென்.அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர்வித்தியாலயம்), மூன்றாமிடம்-வ.சிந்துயன் (பரி.யோவான் கல்லூரி யாழ்ப்பாணம்).

**மத்திய பிரிவு:** முதலம் இடம் - ஜெ.செந்தூரி (இளையதம்பி இந்து மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - யூசலோமி (பாசையூர் சென்.அன்ரனீஸ் றோமன் கத்தோலிக்க மகளிர்வித்தியாலயம்), மூன்றா மிடம் - இ.யோ.கவிநிலா (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்),

**மேற்பிரிவு:** முதலாமிடம் - ஸ்ரீ.உமையாள் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம் - .ம.நிதுசாளினி (யாழ்.வைத்திதீஸ்வராக் கல்லூரி), மூன்றாமிடம் - அ.நளினானி (சுன்டுக்குழி மகளிர் கல்லூரி).

# இலங்கையில் பரவலாக இந்திய தனியார் துறையினர் முதலீடு

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் முன்னேற்றதிற்கு துறைமுகம், எண்ணெய் மற்றும் எரிவாயு பகுப்பாய்வு ஆகிய துறைகளில் இந்திய தனியார் துறைகள் முதலீடு செய்யும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்தியன் 'சோ' வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு மேலும் பேசிய ஆனந்த் சர்மா,


போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் உள்கட்டமைப்பை மேம்படுத்த இந்தியா உதவும். போரில் இடம் பெயர்ந்த தமிழர்களை மீண்டும் அவர்களின் இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக இந்தியா வீடு கட்டித் தருவதை இலங்கை வரவேற்றுள்ளது. இலங்கையில் உள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதில் இந்திய நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டும். இது தவிர எண்ணெய் மற்றும் எரிவாயு பகுப்பாய்விலும் இந்திய நிறுவனங்கள் முக்கிய பங்காற்றும்.

இலங்கையில் முதலீடு செய்ய விரும்பும் தனியார் நிறுவனங்களுக்கு கடன் அளிக்குமாறு இந்திய வங்கிகளை மத்திய அரசு கேட்டுக்கொள்ளும் என்றார்.

# ஆசிரியர் எஸ்.ரி.குமரனுக்கு நாடக பிரதியாக்கத்திற்கான விருது

கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட நாடக பிரதியாக்கப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூயின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன் தேசிய ரீதியிலான சிறப்பு விருதினைப் பெற்றுக்கொண்டுள்ளார்



கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட திறந்தபோட்டியில் 73 நாடகப் பிரதிகள் போட்டியில் கலந்து கொண்டதுடன் அவற்றில் இருந்து 13 நாடக படைப்பாளிகளுடைய நாடகப்பிரதிகளும் ஒன்பது இளம் படைப்பாளிகளின் நாடகப்பிரதிகளும் தெரிவு செய்யப்பட்டு நகல் என்னும் இருபத்திரண்டு நாடகப்பிரதிகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கொழும்பு றோயல் கல்லூரி அதிபர் உபாலி குணசேகர தலைமையில் நடைபெற்றபோது இவ் விசேட விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது வழங்கும் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புலவர் காசீம் ஓமர் (இலங்கை சுயாதீன தொலைக்காட்சி பணிப்பாளர்), கலைஞர் கலைச்செல்வன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# குகநாதன் தாக்குதல் விசாரணை அறிக்கை சட்ட மா அதிபருக்கு

**யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர்**

உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் குகநாதன் தாக் கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்தாகவும் சட்டமா அதிபரின் பதில் கிடைத்ததுடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குகநாதன் 2011 ஆண்டு ஜூலை மாதம் அவர் தாக்கப்பட் டுள்ளார். ஒரு வருடங்கள் கடந்த நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து, கடந்த வாரம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டிருந்தது.

இதற்கு பதிலளித்த பிரதி பொலிஸ் மா அதிபர், இந்தச் சம்பத்துடன் நேரடித் தொடர்புடைய இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு சட்டத்தரணி தொடர்புபட்டிருப்பதால் நடவடிக்கை தொடர்பாக விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது எனவும் இந்த அறிக்கை தொடர்பான சட்டமா அதிபரின் உத்தரவு கிடைத்தவுடன் இவர்கள் மீதான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

# சார்ஜா விபத்தில் இலங்கைப் பணிப்பெண் உள்ளிட்ட மூவர் பலி

துபாய் - சார்ஜா - மலீஹா வீதியில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒரு இலங்கை பணிப்பெண் உட்பட மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளதாக சார்ஜா தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இவ்விபத்தில் 27 மற்றும் 21 வயதுடைய சார்ஜா பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இலங்கை பணிப்பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார். விபத்தில் உயிரிழந்த இலங்கை பணிப்பெண் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

# பயிற்சிப் பட்டறை

(மாவிட்டபுரம்)

இலங்கை இந்திய நட்புறவு அமைப்பினால் நடத்தப்படவுள்ள இசை, நடன பயிற்சிப்பட்டறை நிகழ்வுகள் எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

# பஸ்ஸிலிருந்து வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு

யாழிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பஸ்ஸில் நடத்துனருடன் ஏற்பட்ட தகராறின் காரணமாக பஸ்ஸிலிருந்து விழுந்து இளைஞரொருவர் மரணமாகியுள்ளார்.

கடந்த சனி இரவு யாழ்.பஸ் தியான் சந்திக்கருகில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கிளிநொச்சி, ஜெயபுரத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு கண்ணன் (வயது 25) என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

கொழும்பு செல்லும் பஸ்ஸில் ரிக்கெற் விவகாரத்தில் ஏற்பட்ட தர்க்கத்தினைத் தொடர்ந்து ஓட்டுநர் பஸ்ஸை சடுதியாக திருப்ப முனைகையில் தர்க்கத்தில் ஈடுபட்ட போதே இவர் விழுந்து பஸ் சில்லில் அகப்பட்டு மரணமாகியுள்ளார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## வரலாற்றுத் தவறுகளுக்கு ஒரு பிராயச்சித்தம்

இலங்கையில் வரலாறு விட்டுச்சென்ற தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேடும் பணியில் இன்றைய அரசாங்கம் இறங்கியிருக்கிறது. அதாவது அரசாங்கம் முன்னெடுத்து வரும் இரு மொழி மற்றும் மும்மொழித் திட்டங்களைப் பற்றித்தான் இங்கே குறிப்பிடுகிறோம். இலங்கையில் இனம் சார்ந்த ஓர் ஆயுத மோதல் வெடிப்பதற்கு மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் பங்களிப்புச் செய்திருக்கின்றன.. அதாவது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்களும் ஓர் இன மோதலுக்குத் தாராளமாகவே பங்களிப்புச் செய்திருக்கின்றன. இதனை யாரும் மறுக்க முடியாது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்களம் மட்டும் சட்டம், மொழி வாரியான தரப்படுத்தல், வட பகுதிப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்க எடுக்கப்பட்ட முன்முயற்சிகள், அரச வேலை வாய்ப்புகளில் இன ரீதியாகக் காட்டப்பட்ட பாரபட்சம், அரசின் அனுசரணையோடும், எழுந்தமானமாகவும் தமிழ் மக்கள் மீது காலத்துக்குக் காலமும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்று பலவற்றைக் கூறிக்கொண்டே போக முடியும்.

இதில் முக்கியமான ஒன்று சிங்களம் மட்டும் சட்டம். ஒரு மொழியை மாற்று மொழியினர் மீது திணிக்க எடுக்கப்பட்ட முயற்சி இதுவெனப் பட்டவர்த்தனமாகவே கூறமுடியும். சிங்களத்தை அரச கரும மொழியாக்க வேண்டுமென்று 1940களிலேயே முதலில் குரலெழுப்பியவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பின்னர் 1950களிலும் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளினதும் பிரதான கோஷமாக சிங்களமே ஆட்சிமொழி என்ற அறிவிப்பு முன்வைக்கப்பட்டது. 24 மணித்தியாலங்களுக்குள் சிங்களத்தை அரச கரும மொழியாக்குவேனென்று அடித்துச் சொன்ன எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். சிங்கள வாக்காளர்களைக் கவர்வதற்கு முன்வைக்கப்பட்ட கோஷங்கள் இவை.

பின்னர் பிரதான கட்சிகள் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேட எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் கானல் நீராகின. இதற்கான பொறுப்பும், பங்களிப்பும் கடந்த காலத் தமிழர் தரப்பு அரசியல் தலைவர்களுக்கும் இருக்கிறது. மொழிப் பிரச்சினையும், இனப் பிரச்சினையும் கூர்மையடைந்தமையும், தமிழ் ஆயுததாரிகளை அரசியல் அரங்குக்குக் கூட்டிவரப் பங்களித்திருக்கிறது. இதுவே இந்த நாட்டை வேட்டைக் காடாக்கியது. முப்பது வருடங்களாக இரத்த ஆறு ஓட வழிவகுத்திருக்கிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்தத் தவறைச் சரிவர உணர்ந்து கொண்டு எடுக்கப்பட வேண்டிய பிராயச்சித்த நடவடிக்கை குறித்து அடித்துச் சொல்லியிருக்கிறது.

அரசின் இருமொழி மற்றும் மும்மொழித் திட்டங்கள் ஐந்து முதல் பத்து வருடங்களுக்குள் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துமென அரசாங்கம் நம்புகிறது. ஏற்படுத்தினால் நல்லதுதான். எடுத்ததற்கெல்லாம் இனவாத வாந்தியைக் கக்கும் ஜாதிக ஹெல உருமயக் கட்சியை பங்காளிக் கட்சியாக வைத்துக்கொண்டு இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசினால் முயற்சி எடுக்க முடியுமா?

இனக் குழும மோதல்களால் சிதைந்து போன பல நாடுகள் உலக வரைபடத்திலிருந்து விடுபட்டுப் போய்விட்டன. யுகோஸ்லாவியா, சோவியத் யூனியன், சைப்பிரஸ் என்று பாதிக்கப்பட்ட பல நாடுகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போக முடியும். சோவியத் ரஷ்ய சோஷலிச குடியரசு சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இனக் குழுமங்களைக் கொண்டிருந்த ஒரு நாடு. ரஷ்யர்கள், உக்ரேனியர்கள், ஜோர்ஜியர்கள் மற்றும் ஆர்மேனிய இனத்தவர்களுக்கெல்லாம் 'யூனியன் குடியரசுகள்' இருந்தன. மேற்கூறப்பட்டவை சோவியத் யூனியனிலிருந்த பெரிய இனக்குழுமங்களாகும். இந்த யூனியன் குடியரசுகள் சுயாட்சிப் பிரதேசங்களென அழைக்கப்பட்டன. இந்தச் சுயாட்சிப் பிரதேசங்களுக்குள் கூட செச்சென்ஸ், ஒசேசியன்ஸ், ரார்டார்ஸ் போன்ற சிறிய இனக் குழுமங்களுக்கு விஷேட தாயக ஆட்சியமைப்புகள் இருந்தன. இருந்தும் 1980களின் இறுதிப் பகுதியில் சோவியத் சம்மேளனம் பதினாறு துண்டுகளாகப் பிரிந்து போனது. இப்போதும் கூட ரஷ்யாவுக்குள் செச்னியா, ஜோர்ஜியாவுக்குள் தெற்கு ஒசேசியா என இனப் பிரச்சினைகள் இன்னமும் வெடித்துக் கொண்டுதான் இருக்கின்றன. சோவியத் சம்மேளனத்தின் தகர்வுக்குப் பல காரணங்கள் இருந்தாலும், இன ரீதியான மோதல்களும், முரண்பாடுகளும் கூட அதற்குப் பங்களித்திருக்கின்றன.

இதேபோன்றுதான் அணிசேரா நாடுகள் அமைப்பை உருவாக்கிய நாடுகளில் ஒன்றான யுகோஸ்லாவியாவும் சிதைந்து போய்விட்டது. ஆறு மாநிலக் குடியரசுகளை உள்ளடக்கி, ஐக்கியப்பட்ட நாடாக இருந்த யுகோஸ்லாவியா, 'செர்பியர்கள், குரோஷியர்கள், ஸ்லோவேனியர்கள் என்று பல துண்டங்களாக உடைந்து போயிற்று. இந்தப் பிரிவினைகளுக்கு வெளிநாட்டு உந்துதல்களும் காரணமாக அமைந்திருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையே ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தி வரும் ஐரோப்பிய ஒன்றியம் கூட யுகோஸ்லாவியா பிளவுபடுவதற்குப் பங்களித்திருக்கிறது.

இலங்கையின் தேசிய ஐக்கியத்துக்கு எதிரான சக்திகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இன்னமும் செயற்படுவதாக அரசாங்கம் கூறுகிறது. "பிச்சை வேண்டாம், நாயைப் பிடி" என்ற நிலை உருவாகாமல் தடுக்க வேண்டுமானால், இனமுறுகல் தோன்றியதற்கான மூல காரணங்களுக்கு அரசாங்கம் தீர்வு காண வேண்டும். பிரதான முரண்பாட்டின் மூலவேர்கள் வேரோடும், வேரடி மண்ணோடும் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# அதிகாரப் பரப்பின் பயங்கரம் நோம் சாம்ஸ்கியுடன் ஒரு நேர்காணல்


நோம் சாம்ஸ்கி உலகளாவிய மார்க்சிய / எதிர் ஏகாதிபத்திய சிந்தனையாளர். அமெரிக்காவின் ஏகாதிபத்திய செயல்பாடுகளுக்கு தீவிர எதிர் உருவமாக செயல்படுபவர். பல்கலைகழக வட்டாரத்தில் மொழியியல் கோட்பாட்டாளராக தன் பணியை சாம்ஸ்கி தொடங்கினார். மனித இனம் பிறக்கும் போது மொழி உள்வாங்கலுக்கான இயற்கையான இயந்திர அணுகுமுறையை கொண்டிருக்கிறது என்றார் சாம்ஸ்கி. ஐம்பதுகளில் மேற்கின் மொழியியல் தடத்தில் புதிய உத்திகளை அறிமுகப்படுத்திய சாம்ஸ்கி அதன் அடிப்படையிலான ஆய்வுகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தினார். மொழியியலில் இவரின் முக்கிய ஆய்வு முறை என்பது மொழி மற்றும் மனம் இவற்றுக்கிடையேயான உறவை ஆராய்ந்ததாகும்.

இரண்டாயிரத்திற்கு பிறகு அவரின் சிந்தனை தளம் மொழியியலில் இருந்து விலகி அரசியல் கோட்பாடுகள் மீதே அதிகமும் மிதந்து வருகிறது. அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்கும் காரணத்தால் இவருக்கு பல தரப்பில் இருந்தும் கொலை மிரட்டல்கள் வந்தன. இதன் காரணமாக இவருக்கு தனிப்பட்ட பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

தமிழ் உள்பட இந்திய அறிவுத்துறை வட்டாரங்களில் பிரபலமானவரான சாம்ஸ்கியுடன் எச்.பீர்.முஹம்மது நடத்திய நேர்காணல் இது.

எச்.பீர் முஹம்மது:- சாம்ஸ்கி, நீங்கள் மொழியியல் அறிஞராக அறிவுத்துறையில் நுழைந்தாலும் அரசியல் கோட்பாட்டாளராகவே அதிகமும் அறியப்படுகிறீர்கள். செப்டம்பர் 11 நிகழ்வுக்கு பிறகு உலகம் முழுவதும் அறியப்படும் அறிவுஜீவி. மொழியியல் மற்றும் பிற அறிவுத்துறை பகுதிகள் இவற்றை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்? உங்கள் பின்னணியோடு தொடங்கலாம்.

சாம்ஸ்கி:- என் முதல் அறிவார்ந்த ஈடுபாடு மொழியியல் வழி தான் நிகழ்ந்தது. மொழியின் எல்லை மற்றும் அதன் சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய வேண்டும் என்று இளமைக்காலம் முதலே ஆர்வம் கொண்டிருந்தேன். மொழி மீதான மனித பிரக்ஞை எத்தகையது? அதன் எதார்த்த வெளிப்பாடு என்பது என்ன? மாதிரியான கேள்விகள் என்னை ஆக்கிரமித்து கொண்டன. என் பின்னணி உக்ரேனிய யூத வம்சத்தோடு தொடர்புடையது. என் தந்தை அங்கிருந்து வந்தவர். செமிடிக் மொழிக் குடும்ப கிளையான யத்தி மற்றும் ஹிப்ரு ஆகியவற்றின் பின்னணியில் நான் வளர்க்கப்பட்டேன். மொழி என்பது வெறுமனே உரையாடல் கருவி அல்ல. அது இதை தாண்டிய மனித இயல்போடு பதிவுறும் ஒன்றாகும். மொழியின் இலக்கண அமைப்பு முறைக்கும் மனித நடத்தையியலுக்குமான தொடர்பு, அதன் வெளிப்பாடுகள் என்பதான எல்லை வரை நீண்டது. என் கல்வித்துறை வாழ்க்கையின் ஏறத்தாழ 25 ஆண்டுகளை மொழியியல் எடுத்துக்கொண்டது. பிறக்கும் குழந்தையின் மொழி எவ்வாறு இருக்கும்? அதற்கும் புறநிலை சமூகத்திற்குமான உறவு என்ன என்பதை குறித்து ஆராய்ந்தேன். உளவியலில் மொழி ஒரு செயல்பாட்டு கருவி. அதுவே மிகுந்த சாத்தியப்பாட்டை ஏற்படுத்தும் ஒன்று. ஒரு தனிமனிதன் மொழியை படிக்கும் போது ஒரே நேரத்தில் அறிவையும் அடைகிறான். அவனின் சிந்தனை தளத்தை அது பிரதிபலிக்கும் காலத்தில் நடத்தையியலை வடிவமைப்பதிலும் மொழி முக்கியமான இடத்தை அடைகிறது. என் எழுத்து வாழ்க்கையில், சிந்தனையில் மொழியியல் ஒரு கட்டத்தில் முன்னோக்கி நின்றது. எழுபதுகளில் நடந்த வியட்நாம் போர் எனக்கு அரசியல் கோட்பாடுகள் மீதான ஆர்வத்திற்கு வழி ஏற்படுத்தியது. அமெரிக்காவிற்கு எதிரான மிகவும் கொதிநிலையான மனநிலையில் அப்போது இருந்தேன். அதை எழுத்துக்கும் மனித இயல்புக்குமான இடைவெளியை நேராக்கும் முயற்சி எனலாம். தனிமனிதன் தன்னை அறிந்து கொள்வதில் இருந்து தொடங்கும் ஒரு நடவடிக்கை என இதை புரிந்து கொள்ள முடியும்.



எச்.பீர்முஹம்மது:- உங்களின் மொழியியல் ரீதியான ஆய்வு முறைகள் இன்னொரு கட்டத்தில் அதிகாரம், மனித இருப்பு, உலக போக்குகள் குறித்த ஆய்வுப் பரப்பாக விரிவடைந்தது. அறிவு என்பதையே அதிகாரம் எனக் கொள்ளலாமா?

சாம்ஸ்கி:- மனித இருப்பு அதன் இயல்பு மற்றும் மொழிக்கும் அதற்குமான உறவு என்பவற்றை குறித்து நான் அதிகம் சிந்தித்ததுண்டு. உலக வரலாற்றில் 17 ஆம் நூற்றாண்டிற்கு முன்பு இயற்கையை அறிதல் என்பது மனித வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தி பார்க்கப்படவில்லை. இயற்கை இருப்பானது உயிருள்ளது, உயிரற்றது என்ற வகைப்பாட்டிற்குள் மட்டுமே பார்க்கப்பட்டது. இயற்கை ஒரு விதமான வரிசைக் கிரமத்திற்குள் கொண்டுவரப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இயற்கை அறிவியல் வெகுவாகவே மாறிவிட்டது. அதன் அளவுகோல்கள் விரிவடைந்து விட்டன. புதிய சொல்லாடல்கள் உருவாகி இருக்கின்றன. உதாரணமாக உயிரியலை எடுத்துக் கொள்ளுங்கள். மனித உடலமைப்பை விவரிக்கையில் திசுக்கள், செல்கள் என அது நீள்கிறது. செல்களின் கட்டமைப்பை பற்றிக் கூட விவரிக்கும். ஆனால் அவை அனைத்தையும் மனித இயல்போடு பொருத்திப் பார்ப்பது சாத்தியமானதா? இல்லை என்பதே என் கருத்து.

நியூட்டனின் புவிஈர்ப்பு விசையும், கார்ட்டிசிய விதியும் மனித இயல்போடு பொருந்தி வராதவை. இயற்பியலில் தனிமங்களின் சலனங்கள் வாழ்க்கை பற்றிய கருத்துருவத்தோடு சேர்த்து விளக்க முடியாதவை. உயிரியலும், இயற்பியலும் அதனதன் தனித்த கருதுகோள்களைக் கொண்டவை. அவை எவ்விதத்திலும் மனித இயல்பு மற்றும் வாழ்விற்கான கருதுகோள்களை உள்ளடக்கி இருக்கவில்லை. அவை இன்னொரு நெருக்கடியை நோக்கி நகரக்கூடும். மனித அறிவு என்பதைப் பொறுத்தவரை ஒருவர் தற்போது என்ன அறிந்திருக்கிறார்?. அதன் எல்லை என்ன? என்பதற்கும் இருபது வருடங்களுக்கு முன்னர் என்ன அறிந்திருந்தார் என்பதற்கும் இடைவெளி அதிகம்.

அறிவின் சலனம் ஒரு புள்ளியை நோக்கி நகர்கிறது. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் அது அதிகாரம் என்ற சாரத்தை உள்ளடக்கி இருக்கிறது. அதன் பயன்மதிப்பு குறைந்து விட்டது. இந்நிலையில் அறிவார்ந்த சமூகத்திடம் இருவிதமான பணிகள் கோட்பாட்டளவிலும், செயல் நிலையிலும் காத்திருக்கின்றன. ஒன்று எதிர்கால நீதி சமூகத்தை அதற்கான மனித சமூக கோட்பாட்டு வடிவில் உருவாக்குவது. அதற்கான உறுதியான மனித கருத்துருவத்தை, சாரத்தை ஏற்படுத்துவது. இரண்டாவது பணி என்பது நம் சொந்த சமூகத்தில் அதிகாரத்தின் இயல்பை அதன் பயங்கரத்தை, அழிவை குறித்து தெளிவாக புரிந்து கொண்டு அதனை எதிர்கொள்வது. மேலும் அதிகார நிறுவனங்களை பற்றி அறிந்து கொள்வது. அது பொருளாதார, வணிக மற்றும் நிதி நிறுவனங்கள் வடிவில் வெளிப்படும். பன்னாட்டு நிறுவன குழுமங்கள் இதன் சிறந்த பிரதிபலிப்பு. ஆக தற்போதைய சூழலிலும் அதிகாரத்தை அதன் அசலான தன்மையில் காண முடிகிறது.

எச்.பீர்முஹம்மது:-

அதிகாரம் குறித்த உங்களின் பார்வை சார்பு நிலையாக இருப்பதாகவே நான் நினைக்கிறேன். மன்னிக்கவும். நீங்கள் இலங்கை விவகாரம் குறித்து லங்கா கார்டியன் பத்திரிகைக்கு நேர்காணல் அளித்திருந்தீர்கள்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# 12 மாதங்களில் 40 அரசியல்வாதிகள் கைது

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், எம்.பீ.க்கள் உட்பட நாற்பது அரசியல்வாதிகள் கடந்த பன்னிரண்டு மாதங்களில் கைது செய்யப்பட்டுள்ளனரென்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோகண தெரிவித்தார். கொலை உட்படப் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனரென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்கடத்தல், தாக்குதல், வானியல் வல்லுறவு, நில அபகரிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் உடப்டப் பல்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்களாவர். ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில்

(உடுவில்)

கடந்த வருடம் க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த, ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற பத்தாயிரம் பேருக்குத் தேசிய ரீதியில் ஒவ்வொருவருக்கும் தலா பன்னிரண்டாயிரம் ரூபா ஊக்குவிப்புக்கென வழங்கப்படவுள்ளது.

நிதியத்தின் அங்கத்தவர்களது பிள்ளைகளின் உயர் கல்விக்குப் புலமைப்பரிசில் வழங்கும் முகமாக மாவட்ட ரீதியில் ஒவ்வொரு பாடத்துறையிலும் அதிகூடிய புள்ளிகள் பெற்றதன் அடிப்படையில் இந்தப் பத்தாயிரம் மாணவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் செப்டம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் புலமைப் பரிசில் அலுவலர், புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை நிதியம், இல.92 கிருல வீதி, நாரஹென்பிட்டிய கொழும்பு-5 என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம்.

இவ் விண்ணப்ப படிவங்களை அலுவலகங்களிலோ அல்லது வேலைத்தளத்திலோ பெற்றுக் கொள்ளமுடியும். மேலதிக தகவல் பெற, ஊழியர் நம்பிக்கை நிதியம், பிராந்திய அலுவலகம், 70, மாட்டின வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குவில் கேணியடி வீதி புனரமைப்பு

சண்டிலிப்பாய்

கொக்குவில் கேணியடி வீதி 70 இலட்சத்து 4900 ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கிராமிய சிறு நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 476 மீற்றர் நீளமான இவ் வீதி புனரமைக்கப்படுகிறது. புறநெகும பங்களிப்பில் 64 இலட்சத்து 59 ஆயிரத்து 183 ரூபாவும் உள்ளூராட்சி மன்றத்தின் பங்களிப்பு மூலம் 3 இலட்சத்து 34 ஆயிரத்து 500 ரூபாவும் மக்கள் பங்களிப்பில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 277 ரூபாவும் செலவிடப்படவுள்ளது.

# பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

உடுவில்

நல்லூர் வடக்குச் சமுர்த்திச் செயலணி நடத்திய பொது அறிவுப் போட்டிகளில் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

முதலாம் பரிசு வி.கோபிகா (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி) இரண்டாம் பரிசு - ப.வினுசியா (யாழ். இந்து மகளீர் கல்லூரி) மூன்றாம் பரிசு க.கஜன் (யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை) நான்காம் பரிசு - ச.கிரியா (யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி), ஐந்தாம் பரிசு சி.ரிஸாயினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளார்கள்.




நாட்டில் வரட்சி என்றுமில்லாதவாறு இவ்வாண்டில் கோரத்தாண்டவம் ஆடுகிறது. வரட்சி காரணமாக நாட்டின் நாலா பக்கங்களிலும் உள்ள ஐயாயிரம் குளங்கள் முற்றாக வற்றிப் போயுள்ளன.

இதனை நேரில் கண்டறிவதற்காக நான் நீர்த்தேக்கங்கள் மற்றும் வாவிகள் உள்ள பகுதிகளுக்கு சென்று பார்த்தேன். அப்போது எனக்கு ஒரு அதிகாரியை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதுபற்றி கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் பாரிய நீர்த் தேக்கங்களான பொலன்னறுவையில் இருக்கும் பராக்கிரமபாகு சமுத்திரம், அநுராதபுரத்தில் உள்ள கலாவெவ நீர்த்தேக்கம் ஆகியவற்றின் நீர்மட்டமும் பயங்கரமான அளவுக்கு வீழ்ச்சியடைந்திருப்பதாக கூறினார்.

இவ்விரு நீர்த்தேக்கங்களின் அடிமட்டத்தில் சேறும், குப்பையும் படிந்திருப்பதனால் அவற்றை அகற்றும் பணிகள் இப்போது மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. வரட்சியினால் பெரும் பாதிப்பிற்குள்ளான விவசாயிகளுக்கு உதவும் முகமாக விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் அளிக்கக்கூடிய பாரிய குளங்களை தோன்றும் பணிகளிலும் அமைச்சு இப்போது இறங்கியுள்ளது. இவ்விதம் தோண்டப்பட்ட விவசாய கிணறுகள் மூலம் சில விவசாயிகள் தங்கள் பயிர்கள் வரட்சியினால் கட்டெறிந்து அழிவதை வெற்றிகரமான தடுத்து வருவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

ஏற்கனவே விவசாயத்திற்கான கிணறுகளை கொண்டிருக்கும் விவசாயிகள் அக்கிணறுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு உதவும் முகமாக அமைச்சு 10 ஆயிரம் ரூபாவை உதவியாக வழங்குவதென்றும் தீர்மானித்துள்ளது. வரட்சியினால் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் நெற்காணிகள் முற்றாக அழிவுற்றுள்ளன. பொலன்னறுவை மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒன்றிணைப்பாளர் பி.கே.யு.எஸ்.கே. நாணயக்கார தமது மாவட்டத்தில் மாத்திரம் 8 ஆயிரத்து 400 ஏக்கர் நெற்காணிகள் முற்றாக அழிவுற்றிருப்பதாக கூறினார்.

வரட்சியினால் 20ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறார்கள். இவர்களுக்கு திறைச்சேரி நிவாரணம் அளிப்பதற்காக 3 ஆயிரத்து 765 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. வரட்சி நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதனால் நிவாரணம் கோரும் விவசாயிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவர்கள் வேண்டுமென்றே காடுகளுக்கு தீ வைப்பதனாலும் இயற்கையாகவே காடுகள் தீ பிடிப்பதனாலும் இன்று காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு நாட்டுக்கு கிடைக்கும் மழை வீழ்ச்சியின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது. இத்துடன் காடுகளிலும், நகரங்களிலும் உள்ள மரங்களும் எவ்வித அரச அனுமதியும் இன்றி பணம் சம்பாதிக்கும் எண்ணத்துடன் வெட்டி வீழ்த்தப்படுவதும் வரட்சி மோசமடைவதற்கு இன்னுமொரு காரணமாகும் என்பதை நான் அங்குள்ள மக்களுடன் உரையாடி தெரிந்து கொண்டேன்.

அடுத்தபடியாக நான் வளிமண்டல ஆய்வு திணைக்களத்திற்கு சென்றேன். அங்கிருந்த ஒரு அதிகாரி என்னிடம் இந்தத் தகவலை தெரிவித்தார். தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை வருடாவருடம் ஜூன் மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையில் பெய்யும். ஆயினும் இந்தத் தடவை தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை எதிர்பார்த்த அளவுக்கு நாட்டுக்கு கிடைக்கவில்லை. வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை நவம்பர் மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையில் பெய்வதுண்டு. இவை எல்லாவற்றிலும் ஒக்டோபர் முதல் நவம்பர் மாதம் வரை பெய்யும் இடைநிலை தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழையே நாட்டிற்கு தேவையான அளவு நீரை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்று அவர் சொன்னார்.

பண்டைய மன்னர் காலத்தில் இப்போது இருப்பதைப் போன்று பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பொறியியலாளர்களோ, கட்டிடக் கலைஞர்களோ இருக்கவில்லை. என்றாலும் அன்று கட்டிடக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இருந்த காரணத்தினால் மகா பாராக்கிரமபாகு மன்னன் போன்ற எங்கள் நாட்டின் பெருமைக்குரிய மன்னர்கள் வாவிகளையும், நீர்த்தேக்கங்களையும் செயற்கையாக அமைத்து அவற்றில் மழை நீரை தேக்கிவைத்து எங்கள் நாட்டை பொன் விளையும் பூமியாக மாற்றினார்கள்.

அன்றைய மன்னர்கள் வருடாவருடம் இந்த நீர்த்தேக்கங்கள் மற்றும் வாவிகளின் கரைகள் உடைப்பெடுப்பதை தடுப்பதற்காக கரைகளில் உள்ள சிதைவுகளை செப்பனிட்டு வலுவாக வைத்திருந்தார்கள். அளவுக்கு அதிகமான மழை வீழ்ச்சியினால் வாவிகளும், நீர்த்தேக்கங்களும் நிரம்பி கரைகள் உடைப்பெடுப்பதை தடுப்பதற்காக அவர்கள் ஒரு பாதாள சுரங்கப் பாதையை திறந்து நீரை பாதுகாப்பாக நாட்டில் வெள்ளப் பெருக்கு ஏற்படாத வகையில் வெளியேற்றும் சிறந்த பொறியியல் யுக்திகளையும் கையாண்டு வந்தார்கள்.

அப்படியான ஒரு புதிய யுகம் இலங்கையிலும் அடுத்த சிறுபோக, பெரும்போக நெல் விளைச்சலின் போது உருவாகும் என்ற நம்பிக்கையுடன், நான் எனது கூட்டுக்கு பறந்து சென்றேன்.

# அதிகாரப் பரப்பின் பயங்கரம்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ன நிகழ்ந்தது என்றே தெரியவில்லை. அவர்கள் உங்களை வென்று விட்டார்கள். இலங்கை விவகாரம் பாலஸ்தீன் போன்றே இரு நூற்றாண்டுகளின் துயரம். அதற்கு மறுப்பாக என் நண்பர்கள் சிலர் விளக்க அறிக்கை ஒன்றை உங்களுக்கு அனுப்பி இருந்தார்கள். நானும் அதில் கையெழுத்திட்டிருந்தேன். பாலஸ்தீன் குறித்த ஆழ்ந்த அனுதாபமும், அவதானமும் கொண்ட நீங்கள் ஏன் தெற்காசிய விவகாரங்களிலிருந்து உங்களை துண்டித்துக் கொள்கிறீர்கள்.?

சாம்ஸ்கி:- இலங்கை விவகாரம் குறித்து லங்கா கார்டியனுக்கு நான் அளித்த நேர்காணல் தவறாக பிரதியாக்கம் செய்யப்பட்டதாகவே கருதுகிறேன். எனக்கு அந்த விவகாரம் குறித்த விரிவான அகன்ற படிப்போ அல்லது பார்வையோ இல்லை. இதை நான் அவர்கள் அனுப்பிய மின்னஞ்சலுக்கான பதிலிலும் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன். நீங்கள் சொன்னது போன்றே அது ஒரு துயரம் தான். அது தீர்க்கப்பட வேண்டும். அங்குள்ள சிறுபான்மையினர் எல்லா வித சம உரிமைகளை பெற வேண்டும் என்பதே என் விருப்பம்.

எச்.பீர்முஹம்மது:- சர்வதேச பயங்கரவாதம் என்ற சொல்லாடல் 9/11 பிறகு தானே உருவானது?

சாம்ஸ்கி:- கொடூரமான செப்டம்பர் 11 நிகழ்வு உலக விவகாரத்தில் முற்றிலும் புதியது. அது அளவுகோல் மற்றும் குணாதிசய அடிப்படையில் அல்ல. மாறாக இலக்கு அடிப்படையிலானது. இப்போது பயங்கரவாதம் என்ற சொல்லாடல் உலக அரங்கில் முன்னிலை பெற்றிருக்கிறது. நான் பயங்கரவாதம் என்பதை பலமானவர்களுக்கும் பலவீனமானவர்களுக்கும் இடையேயான போராட்டமாகவே எப்போதும் பார்த்து வந்திருக்கிறேன். கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் எகிப்தை கைப்பற்றிய போது கடற்கொள்ளையன் ஒருவன் அவரிடத்தில் சிறைபட்டான். அப்போது அலெக்சாண்டர் "நீ எப்படி கடற்பரப்பு முழுவதையும் கைப்பற்றுகிறாய்" என்று அவனிடம் கோபமாக கேட்டார். அதற்கு அவன் "நீங்கள் எப்படி உலகம் முழுவதையும் கைப்பற்றினீர்கள்" என்று திருப்பி கேட்டான். நான் ஒரு கப்பலை மட்டுமே கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன். ஆகவே நான் கொள்ளையன் என்று அழைக்கப்படுகிறேன். ஆனால் நீங்கள் பெரும் படையையே வைத்திருக்கிறீர்கள். ஆக நீங்கள் பேரரசு என்றழைக்கப்படுகிறீர்கள். இந்த பழங்கதையில் கடற்கொள்ளையன் சொன்ன பதில் அறிவுபூர்வமானது. நுண்மையானது. இந்த ஒப்பீட்டை தான் அமெரிக்க வி'யத்திலும் கையாள வேண்டியதிருக்கிறது.

பயங்கரவாதம் என்ற சொல்லாடல் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏகாதிபத்திய அரசுகளால் வழக்கத்திற்கு வந்தது. அந்த அரசுகளின் மக்கள் மீதான அடக்குமுறை திணிப்பை குறித்தது. கால தொடர்ச்சியில் வெகுஜன திரளின் சிந்தனையையும், கருத்து வெளிப்பாட்டையும் கட்டுப்படுத்தும் அரசுகளின் செயல்பாட்டை குறிப்பதற்கான சொல்லாடலாக இது மாறியது. பின்னர் அது சர்வாதிகார அரசுகளை எதிர்க்கும் மாற்று அரசுகளை குறிப்பதற்கான சொல்லாக மாறியது. தொடர்ச்சியில் அரசுகளை எதிர்க்கும் சிறுகுழுக்களையும் இ சிவிலியன்களையும் குறிப்பதற்கான சொல்லாக பரிணாமமடைந்தது. ஆக பயங்கரவாத சொல்லாடல் அதிகார மற்றும் கருத்தியல் நிலைபாடுகளுக்கு ஏற்ப தகவமைக்கப்படுகிறது.

அமெரிக்காவை பொறுத்தவரை 19 ஆம் நூற்றாண்டில் அது சிலுவையுத்தம் என்ற சொல்லை பயன்படுத்தியது. பின்னர் போர் மற்றும் மனிதாபிமான தலையீடு என்பதாக மாற்றிக்கொண்டது. 1991 இல் வளைகுடா இராணுவ நடவடிக்கையை அது போர் என்றது. செர்பிய மீதான யுத்தத்தை மனிதாபிமான தலையீடு என்றது. அதன் நியாயப்பாட்டிற்காக பலவீனமான வாதங்கள் முன்வைக்கப்பட்டன. அதன் பிறகு அமெரிக்கா ஆப்கானிஸ்தான், ஈராக் என்ற இரு யுத்தங்களை நிறைவேற்றி இருக்கிறது. இங்கு குற்றம் என்பது மனித இனத்திற்கான குற்ற நடவடிக்கையாக பார்க்கப்பட வேண்டும். செப்டம்பர் 11 க்கு பிறகு அமெரிக்கா பயங்கரவாதம் என்பதை சர்வதேசம் என்ற எல்லை விரிவாக்கத்திற்கு பயன்படுத்திக்கொண்டது. அதனை எதிர்ப்பது என்பதே பயங்கரவாத நடவடிக்கை என்பதாக சுயமாக அந்த சொல்லாடலுக்கு அமெரிக்கா விளக்கம் அளிக்கத் தொடங்கியது.

இப்போது ஒபாமா அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்பதை மாற்றி விட்டு புதிய சொல்லாடலுக்கான மொழி சாத்தியங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. வரலாற்றில் எந்த அதிகார கிடங்குகளும் நிலையானதல்ல என்பதற்கான உதாரணங்கள் நம் கண்முன் நிறைந்து கிடக்கின்றன.

## மனிதத்தை நோக்கிய ஒரு கேள்வி

# கோணப்புலம் மக்களுக்கு கிட்டுமா மீள்குடியேற்ற விமோசனம்?

இது ஒரு தெல்லிப்பளை பிரதேசசபைக்கு உட்பட்ட ஒரு சிறு கிராமம். இக்கிராமத்தின் தற்போதைய குடிகள் கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்பு தமது வாழ்விடங்களான காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி ஆகிய இடங்களை விட்டு ஒரே நாளில் ஓட ஓட விரட்டப்பட்ட மக்கள்

ஆம்.... அது இன்று ஒரு அகதிகள் முகாம்.

தமது மண்ணை மரணிக்கும் முன் ஒரு தடைவை பார்த்து விடவும் அந்த நிலத்தில் தேகம் சாய்த்து துயின்றிடவும் துடிக்கின்ற மக்கள் கூட்டத்தின் "அகதிகள் முகாம்....."

விரட்டப்பட்ட நாளிலிருந்து நாளை நாளை என தாம் மீண்டும் குடியேறப்போகும் தினத்தை எண்ணி எண்ணியே இரண்டு தசாப்தங்களை ஏமாற்றத்துடனும் கனவுகளுடனும் கடத்திவிட்ட தமிழர் கூட்டம் வாழும் அகதிகள் முகாம்.....

கடும் உழைப்பையே தமது மூலதனமாக கொண்டு தம்மையும் மற்றவரையும் வளப்படுத்தும் ஓர்மம் கொண்ட இந்த மக்கள் மீன் பிடியையும், விவசாயத்தையும் பிர-தான வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள்.

இன்று தமது கடலையும் செம்மண்ணையும் கண்ணில் பார்க்க முடியாமல் அவர்கள் படும் வேதனைகள் சொல்லில் அடங்காதவை. சொந்தத் தொழில்களாக அவர்களுக்கு இருந்த மீன் பிடியும், விவசாயமும் இன்று அவர்களுக்குக் கூலித்தொழிலாகிப் போனது. கடும் உழைப்பின் பலனாக மாளிகைகளாக இருந்த அவர்களது இல்லங்கள் இன்று பாழடைந்து,காணிகளெல்லாம் பற்றைக்காடுகளாக பரிணாமம் பெற கோழிக்கூட்டுக்குள்ளே தமது எஞ்சிய வாழ்வைக் கடத்தும் அவலத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அரச அதிகாரிகளினதோ, அரசியல்வாதிகளதோ அக்கறைக்குட்பட்டிராதவர்கள் இந்த மக்கள் அரசியல் ஆதாயம் கருதி தேர்தல் திருவிழாக்காலங்களில் மட்டும் எமது அரசியற் தலைவர்கள் இவர்களை நாடுவதுண்டு.

"சீசன்" முடிந்ததும் அவர்களுக்கு இந்த இடமும் மக்களும் மறந்து போனவைகளாகி விடும். அரசியல்வாதிகள் தான் இப்படியென்றால் அவர்களுக்கு வால்பிடித்து சோரம் போகும் அரச அதிகாரிகள் கூட இந்த மக்களது அபிலாசைகளுடன் விளையாடும் போக்கைக் கொண்டுள்ளார்கள்.

போர் முடிந்து "வசந்தம் வீசும் என எதிர்பார்க்கும் மக்களுக்கு சுவாசிக்கும் காற்றைக்கூட மறுக்கும் ஒரு வித மனோ வியாதியில் எமது மண்ணின் தலைமைகளும், வால் பிடிகளும் கிட்டத்தட்ட இருநூற்று ஐம்பது குடும்பங்களைச் சார்ந்த ஆயிரத்து ஐநூறு மக்கள் இங்கு வசிக்கின்றார்கள். அவர்களுக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே பொது மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

காலையிலே தமது இயற்கைக்கடனை நிறைவேற்ற ஒரு மலசல கூடத்துக்கு ஏறக்குறைய எழுபது பேர் காத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

உலகமயமாதல் யுகத்தில் இப்படியொரு "வடக்கின் வசந்தம்" கிராமம் இருப்பதையிட்டு யார் தான் பெருமை கொள்ள முடியும்? உண்மையிலே இந்த இடம்பெயர்ந்தோர் கிராமம் என்பது எமது தமிழ் சமூக வாழ்வியக்கத்திலே காணக்கூடியதான ஒரு சோற்றுப்பதம் தான்.

எண்ணத்துடனேயே இக் கட்டுரை வரையப்படுகிறது.

அரசு, ஐ.நா சபை, அரச பொது நிறுவனங்கள் என்பன மானிட விழுமியங்களைப் பேணும்

> நீண்ட நாட்களாகியும் தா
> ஏமாற்றப்பட்டதையிட்டு குறித்த
> "ஏன் எங்களுக்கு வாக்களித்
> கேட்கின்றனராம் இந்த மக்கள்
> எப்படியிருக்கிறது..? மக்களுட
> மறுப்பவர்களின் விமோசன அ
> புறமென்றால் தமிழ் தேசிய சிந்
> கொள்ளும் தரப்பினர் கதை
> இரண்டதைப் பார்த்

நோக்குடனேயே கட்டமைக்கப்பட்டன.

ஜனநாயகம், சோசலிசம், குடியரசு, அரசியல், நாடு, சர்வதேசம் என்பனவெல்லாம் மனிதத்துவத்தைப் பேணு நோக்கிலான கட்டமைப்புகளும் கோட்பாடுகளுமாகும்.

எனினும் இங்கு இந்த மண்ணில் விடுதலை, சுதந்திரம், அபிவிருத்தி என்பன போன்ற பதங்கள் கட்டுக்குள் நிற்கும் மானிடக் கால்நடைகளுக்கான அலங்கார வார்த்தைகளாகவே தென்படுகின்றன.

அரசியல் என்பது நாட்டையும் மக்களையும் ஆரோக்கியமாகப் பேணுகின்ற துணை" என்ற நிலை மாறி அரசியல் வாதிகளின் "தொழில் என்றான போது குடிமக்கள் நட்ட நடு வனாந்தரத்தில் விடப்பட்ட குழந்தைகளாகின்றார்கள். முடியரசு குடியரசானதில் அடிப்படைத்தத்துவங்கள் மாறி குடியரசிலேயே முடியரசு உருவாகி, அங்காங்கே சில பல சிற்றரசுகளும் உருவாகி விடுகின்றன. இங்கு கொடுமை என்னவெனில் சாம்ராய்ச்சியத்திலிருந்து சிற்றரசு வரை கொடுங்கோல் அரசோச்சுவதுவே. பாவம் குடி மக்கள்.

போருக்குப் பின்னான காலகட்டம் பல விசக்கிருமிகளுக்கு இருந்த அச்சங்களைப் போக்கி தமது சுய உருவங்களைக்காட்டும் தைரியத்தைத் தந்திருக்கின்றது. கட்டுரையாளர் அரசியல் பேச விரும்பாவிடினும் இங்கு அரசியலைப்பற்றிக் குறிப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது.

தனது சொந்த மண்ணில், உரித்தான காணியில் கொட்டிலோ குடிசையோ எதுவானாலும் தனது வீட்டில் வாழுவதற்கு இந்த உலகில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிமையுண்டு. வெறுமே உரிமை என்பதுடன் அதை மட்டுப்படுத்த முடியாது. உலக மக்கள் சமூகத்தின் இயங்கியலில் இந்த உரிமையே அடிப்படைக் கோட்பாடாக இருக்கிறது. இங்கிருந்தே அனைத்து சமூகக் கட்டமைப்புக்களும் தோற்றம் பெறுகின்றன. தேசியக் கட்டமைப்புக்கள், சமூக கட்டமைப்புக்கள், சமூக அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள் என்பவற்றிற்கு இது பொருந்தும்.

மனிதத்துவத்தைப் புறக்கணிக்கும் போது இக்கட்டமைப்புக்கள் யாவும் அர்த்தமிழக்கின்றன, செயலிழக்கின்றன.

எந்த அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காவும் எவரையும் பலவந்தமாக வெளியேற்றும் செயற்பாடுகள் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். அதை விட மோசமானது அந்த மக்களை மீளக் குடியமர்த்துவதாக சொல்லி ஏமாற்றுவதாகும்.



ஒரு தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஊடாக இக்கிராமத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட கட்டுரையாளர் அந்த நிறுவனத்தினருடன் அங்கு சென்று நேரில் கண்டவற்றையும் தனது உணர்வினையும் பதிவு செய்யும்

வாழ்விடங்களில் இருந்து எந்த நியாயமான காரணங்களுமின்றி வெளியேற்றப்பட்ட மக்களைத் தகுந்த காரணங்கள், நட்ட ஈடுகளுடன் மீண்டும் குடியேற்றுவதே நியாயமானதாகும். ஆனால் அந்த மக்களின் மீளக்குடியேறும் வேட்கையை வைத்து

அரசியல் நடாத்துவது சமூக விரோத செயலாகும். போருக்குப் பின்னான காலப்பகுதியில் பல தேர்தற் களங்களை யாழ்ப்பாணம் சந்தித்திருக்கின்றது.

சாதாரண நாட்களில் எமது அரசியல் தலைமைகளுக்கு மனிதர்களாகத் தென்படாத கோணப்புலம் அகதி மக்களைப் போன்றவர்கள் தேர்தல் "சீசனில" மட்டும் வரம் தரும் கிராமத் தெய்வங்களாக மாறும் அதிசயம் நடக்கிறது.

பொங்கலும் வேள்வியும் சில வேளைகளில் சாராயங்களும் இந்தத் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடனாகப் படைக்கப்படுகின்றன.

கோணப்புலம் இடம்பெயர்ந்த மக்களுக்கோ இவற்றுடன் மேலதிகமாக தமது பூர்விக இடங்களில் மீளக்குடியமர்த்துவதாக வாக்களித்து ஆதரவைக் கோரியதுடன், கூடவே அவர்களது இடங்களைக் காட்டுவதாகக் கூறி பேருந்துகளில் ஏற்றிச் சென்று மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலடியைக் காட்டிவிட்டு வாக்குகளைக் கோரியிருக்கின்றனர். நிலவைப் பிடித்துத் தரும்படி அழுத குழந்தைக்கு கண்ணாடியில்

> மீளக்குடியமர்த்தப்படாமல்
> ட்சி பிரதிநிதிகளிடம் கேட்டபோது
> ர்களா?" என மறுத்து கேள்வி
> நலன் நாடும் அரசியல் கட்சிகள்
> ான உடன்பாட்டையே பேண
> சியல் இவ்வகையானோர் ஒரு
> தயில் ஊறியவர்களாகக் காட்டிக்
> பா அருண்டவன் கண்ணால்
> து போலத் தான்....

நிலவைக்காட்டிய அதி புத்திசாலிகளுக்கு துணைக் கதாபாத்திரங்களாக அரச அதிகாரிகளும் கோவைகளைக் காவிக்கொண்டு சென்று நாடகத்தை செம்மையாக நடாத்த உதவியது தான் ஆகப் பெரிய கொடுமை.

தேர்தல் சீசன் முடிந்தது. எவரும் அம் மக்களை இப்போது பார்க்க வரவில்லை. அவர்களால் நடாத்தப்பட்ட வேள்விகளில் சிதறிய எலும்புத் துண்டுகள் மட்டும் எடுப்பார் இல்லாமல், ஆங்காங்கே நிறமங்கிய கிழிந்த சேதமான சுவரொட்டிகளாகக் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நீண்ட நாட்களாகியும் தாம் மீளக்குடியமர்த்தப்படாமல் ஏமாற்றப்பட்டதையிட்டு குறித்த கட்சி பிரதிநிதிகளிடம் கேட்டபோது ஏன் எங்களுக்கு வாக்களித்தீர்களா?" என மறுத்தான் கேள்வி. கேட்கின்றனராம் இந்த மக்கள் நலன் நாடும் அரசியல் கட்சிகள்

எப்படியிருக்கிறது..? மக்களுடனான உடன்பாட்டையே பேண மறுப்பவர்களின் விமோசன அரசியல் இவ்வகையானோர் ஒரு புறமென்றால் தமிழ் தேசிய சிந்தையில் ஊறியவர்களாகக் காட்டிக் கொள்ளும்



தரப்பினர் கதையோ அருண்டவன் கண்ணால் இரண்டதைப் பார்த்தது" போலத் தான் அண்மையில் இம்மக்களின் சிறார்களது கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் நடவடிக்கையில் இறங்கிய ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை அரண்ட

விழிகளால் பார்த்த இளம் அரசியல் வாதி கூறிய வார்த்தைகள்...

"நம்பாதேங்கோ....! கவனமா இருங்கோ இவங்கள் பிள்ளையளின்ர கிட்னியையும் பிவரையும் களவா எடுத்து வித்துப்போடுவாங்கள்"

இதுவும் எப்படியிருக்கிறது

மக்களை உய்விக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டார்கள். யாராவது உதவச் சென்றால்



தமதுஅரசியல் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலாகி விடலாம். என்ற பீதியில் பிதற்றிக் கொண்டு திரிவது. இத்தகையோரது அரசியல்களுக்கு மத்தியிலே எம்மக்கள் படும் துயரம் சொல்லப்பாற்பட்டது அல்ல.

இந்த மக்கள் எவரிடமும் எவற்றையும் இரந்து கேட்கவில்லை அவர்கள் கேட்பது எல்லாம் ஒன்றே ஒன்றுதான் "எமது வாழ்விடங்களில் எம்மை வாழ விடுங்கள்"

இது மட்டுமே தான்..

எங்கடை இடத்திலை எங்களை விட்டு எங்கடை தொழில்களை நாங்கள் செய்ய அனுமதிச்சால் எவரின்ர உதவியும் தேவையில்லை எங்களை நாங்களே வளர்த்துக்கொள்வோம். இது அவர்கள் எல்லோரதும் ஒத்த கருத்து வெளிப்பாடாக இருக்கிறது.



இந்த மக்கள் எவருது உதவியும் இல்லாமல் தமது கடும் உழைப்பால் முன்னுக்கு வந்தவர்கள். தமது கடற் தொழிழினாலும் விவசாயத்தாலும் மண்ணையும் தம்மையும் வளப்படுத்தி வாழ்ந்தவர்கள். சொந்தமாக தொழில்கள் வைத்து நடாத்தியவர்கள். பல தொழிலா-ளர்களை கூலிக்கு அமர்த்தி அத் தொழிலாளர்களையும் உயர்த்தி விட்டவர்கள். இன்று அவர்களே கூலித் தொழிலாளிகளாக செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

உதாரணத்துக்கு கடற் தொழில் சொந்தமாக செய்தவர்கள் இன்று முல்லைத்தீவு, மன்னார் போன்ற பகுதிகளுக்குச் சென்று அதே கடற் தொழிலை கூலிக்குச் செய்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றனர்.

இன்னொரு தரப்பினரோ கட்டிட வேலைகள்

வீதிவேலைகள் என்பன வற்றில் கூலிகளாக செயற்படுகின்றனர்.

பொருளாதார ரீதியாக மிகவும் தள்ளாடும் இந்த மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடாத்தி செல்வதற்கே போராடும் நிலை.

இதனால் பாடசாலை செல்லும் சிறார்கள் கூட பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தி விட்டு பழைய இரும்புகளைச் சேகரித்து விற்கும் தொழிலை

மேற்க்கொள்கின்றனர்.

தமது சுற்றாடலில் உள்ள, போரினால் பாதிக்கப்பட்டு சிதைவடைந்து பற்றைகள் மண்டிப் போயிருக்கு கட்டிடங்களைத் தோண்டி இந்த இரும்பு வகையறாக்களை அவர்கள் சேகரிக்கின்றார்கள். இதனால் கல்வியை இழந்து எதிர்காலத்தையே பழாக்கிக் கொள்வதுடன் இரும்பு சேகரிக்கும் முயற்சியில் பாரதூரமான காயங்களுக்குள்ளாகியும் பற்றைகளிடையே மறைந்திருக்கும் விச உயிரிகளின் தாக்குதலுக்கும் முகம் கொடுக்கின்றனர்.

இந்த நிலை நிச்சயமாக ஆரேக்கியமான சமூகத்தை கட்டமைப்பதில் பாதிப்புக்களை ஏற்படுத்தவே செய்யும்.

அவர்கள் வாழ்விடங்கள் கூட மனிதர் வாழ்வதற்கு ஏற்றதாக இல்லை. மிகக் குறுகிய தற்காலிக கட்டிட அமைவுக்குள்ளே வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகளால் சமூகச் சீர்கேடுகள் மலிந்து இளவயதுத் திருமணம், பதின்ம வயதுக் கர்ப்பம், முறை தவறிய நடத்தைகள் என்பனவற்றினால் தோற்று வாய்களை உருவாக்குகின்றன.

அத்துடன் இந்த இடங்களில் இருப்பதற்கும் தற்போது அவர்கள் கடந்த நெருக்கடி காலங்களில் இந்த இடங்களில் குடியமர அனுமதித்த நிலச் சொந்தக்காரர்கள் தற்போது இவர்கள் அனைவரையும் வெளியேறும்படி நிர்ப்பந்திக்க தொடங்கியிருக்கின்றனர். இதுவரை இருந்து வந்த பிரச்சனைகளுடன் இப்புதிய பிரச்சனையும் சேரவே திக்குமுக்காடிப் போய் விழி பிதுங்கி நிற்கும் இந்த ஆதரவற்றோருக்கு கரங்கொடுக்க எந்த அரசியல் அமைப்புக்களோ, அரச நிறுவனங்களோ, பொது அமைப்புக்களோ முன் வரவில்லை.

எனினும் இவற்றை இப்படியே விட்டு விடாது இந்த மக்களுக்கு ஏதாவது விமோசனம் பெற்றுக் கொடுக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பு மிக்கோரின் கடமையாகும்.

மக்களைப்பற்றிப் பேசுபவர்கள், மக்கள் நலன் சார்ந்து செயற்படுபவர்களாகக் கூறிக் கொள்பவர்கள் எதையும் அந்த மக்களுக்குக் கொடுக்க தேவையில்லை. அந்த மக்களின் பிரச்சனைகளை உரிய முறையில் அரச தரப்பினருக்கோ, அதிகார மட்டத்தினருக்கோ தெரியப்படுத்தி உரிய வகையில் அழுத்தம் கொடுப்பதையாவது செய்யலாம்.

கட்டுரையாளரை அழைத்துச் சென்ற தொண்டர் நிறுவனமும் இதைத்தான் செய்கின்றது. இதற்கு அரச-ியல் தேவையில்லை, பக்கச் சார்பு தேவையில்லை. மக்கள் நலன் மீதான உண்மையான அக்கறையும், நேர்மையான சேவை மனப்பான்மையும், ஓர்மமான உழைப்பும் மட்டுமே போதும்.

காகக்கூட்டிலே குடியிருக்கும் இந்த குயில்களுக்கு விடிவு கிடைக்குமோ?

**சரணிகா**

# வீரர்களுக்கு சம்பளம் வழங்கப்படாத விவகாரம்: விசாரணைக்கு முட்டுக்கட்டை போடும் ஐ.பி.எல்..!

இந்தியன் பிறீமியர் லீக்கில் பங்குபற்றிய வீரர்கள் சிலருக்கு ஊதியங்கள் வழங்கப்படாமை குறித்து சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு தலையிடுவதற்கு இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு போதிய ஒத்துழைப்பை வழங்கவில்லை என சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

வீரர்களுக்கான ஊதியங்கள் வழங்கப்படாமை குறித்து சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் சபை இந்தியன் பிறீமியர் லீக் அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றதாகவும், ஆனால் இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு தங்கள் தொடர்புகளுக்கு பதில்களை வழங்கவில்லை எனவும் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு இடம்பெற்ற இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் பங்குபற்றிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களுர் அணியின் வெளிநாட்டு வீரர்களுக்குரிய ஊதியப் பணத்தின் வழங்கப்பட வேண்டிய பகுதி இன்னமும் வழங்கப்படாமை குறித்தே சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.


தாங்கள் நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்த முயன்ற முயற்சி தோல்வியடைந்ததை அடுத்து குறித்த வீரர்களை தங்கள் கிரிக்கெட் சபைகளின் மூலம் இந்தியன் பிறீமியர் லீக் அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளதாக சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிம்மே தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றிய வீரர்களுக்கான ஊதியங்கள் தொடர்பான பிரச்சினை எழுந்த போது சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு நேரடியாகத் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த போதிலும், இந்தியன் பிறீமியர் லீக்கில் அதைச் செய்துகொள்ள முடிந்திருக்கவில்லை என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் கரம் அணியும் இணைந்து நடத்திய கரம் சுற்றுப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட வண்னை ஸ்ரீகாமாட்சியம்பாள் சனசமுக நிலைய கரம் விளையாட்டுக்கழக வீரர்களையும் மற்றும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பௌதிகத்துறை தலைவர் பேராசிரியர் பீ. ரவிராஜன் மற்றும் பல்கலைக்கழக விளையாட்டு துறைப் பணிப்பாளர் கே.கணேசநாதன் விரிவுரையாளர் சி.சுரேந்தினி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# இலங்கைக்கு அபராதம்



இலங்கை அணி வீரர்களுக்கும், அணித்தலைவர் ஏஞ்சலோ மத்தியூஸிற்கும் சர்வதேசக் கிரிக்கெட் சபையால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கெதிரான போட்டியில் இலங்கை அணி தாமதமாகப் பந்துவீசியதன் காரணமாகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


ஒதுக்கப்பட்ட நேரத்தில் இலங்கை அணி ஓர் ஓவர் தாமதமாகப் பந்துவீசியிருந்த நிலையில் இலங்கை அணியின் தலைவராகச் செயற்பட்ட ஏஞ்சலோ மத்தியூஸிற்கு போட்டி ஊதியத்தின் 20 சதவீதமும், இலங்கை அணியின் ஏனைய வீரர்களுக்கு 10 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டது.

இலங்கை அணியின் வழமையான அணித்தலைவர் மஹேல ஜெயவர்தனவிற்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்த நிலையில் இலங்கை அணியின் தலைவராக ஏஞ்சலோ மத்தியூஸ் செயற்பட்டார்.

அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 12 மாதங்களுக்குள் ஏஞ்சலோ மத்தியூஸ் இன்னொரு தடவை ஒரு நாள் சர்வதேசப் போட்டி அணிக்குத் தலைமை தாங்குவாராயின், அதன்போது இலங்கை அணி தாமதமாகப் பந்துவீசுமாயின் ஏஞ்சலோ மத்தியூஸிற்கு ஒரு போட்டித் தடை விதிக்கப்படும்.

போட்டியில் ஏற்பட்ட அனைத்துத் தாமதங்களும் கருத்திற் கொள்ளப்பட்ட பின்னரே அபராதம் விதிக்கப்பட்டதாக சர்வதேசக் கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

# ஐ.சி.சியின் ஒருநாள் தரவரிசை இரண்டாம் இடத்தில் கோஹ்லி



ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரிசையில் இந்திய வீரர் விராட் கோஹ்லி 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ளது.

முன்னதாக தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருந்த விராட் கோஹ்லி, இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் 296 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் இப்போது 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இதுதான் அவரின் அதிகபட்ச தரவரிசையாகும்.

தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்காவின் ஹசிம் ஆம்லாவுக்கும், கோஹ்லிக்கும் இடையிலான புள்ளிகள் வித்தியாசம் 13 மட்டுமே. வரும் 24ஆம் திகதி தொடங்கும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் ஆம்லா சிறப்பாக விளையாட தவறும்பட்சத்தில் கோலி முதலிடத்தை எட்டிவிடுவார்.

3ஆவது இடத்தில் தென் ஆப்பிரிக்காவின் டிவில்லியர்ஸ் உள்ளார். இந்திய கேப்டன் மகேந்திர சிங் டோனி 5ஆவது இடத்தில் உள்ளார். இலங்கைத் தொடரில் 258 ஓட்டங்கள் குவித்த கம்பீர் 7 இடங்கள் முன்னேறி இப்போது 10ஆவது இடத்தைப் பிடித்தார். இவர்களைத் தவிர வேறு எந்த இந்திய வீரர்களும் முதல் 10 இடங்களுக்குள் இல்லை.

புந்து வீச்சாளர் தரவரிசையைப் பொறுத்தவரையில் பெரிய அளவில் எவ்வித மாற்றமும் இல்லை.

முதல் இருபது இடங்களுக்குள் இந்திய வீரர்கள் யாரும் இல்லை. தென்னாபிரிக்காவின் சோட்சோபி, பாகிஸ்தானின் முகமது ஹபீஸ், சயீத் அஜ்மல் ஆகியோர் முதல் 3 இடங்களில் உள்ளனர்.

# நியூசிலாந்தை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள்

நியூசிலாந்து அணியுடனான 2ஆவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது. ஜமைக்கா, சபினா பார்க் மைதானத்தில் நடந்த இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் பந்து வீசியது. நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 260 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அடுத்து களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்சில் 209 ஓட்டங்களுக்கு சுருண்டது. சாமுவேல்ஸ் 123, அணித்தலைவர் சமி 32 ஓட்டங்கள் எடுக்க, மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து, 51 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து 2ஆவது இன்னிங்சில் வெறும் 154 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும இழந்தது. குப்தில் 42, பிரவுன்லி 35 ஓட்டங்கள் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீச்சில் தியோநரைன் 4, சுனில் நரைன் 3, பெஸ்ட் 2, ரோச் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

அடுத்து 206 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் 2வது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 3ஆம் நாள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 135 ரன் எடுத்திருந்தது. கேல் 8, பாவெல் 6, சாமுவேல்ஸ் 52, புடாடின் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். 4ஆம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் 63.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 206 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக சாமுவேல் 52 ஓட்டங்களை எடுத்தார். சந்தர்பால் 43 ஓட்டங்கள், டியோ நரைன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# இலங்கை வாங்கிய ரிக்கெற்றுக்கள் எங்கே?

லண்டனின் ஒலிம்பிக் போட்டிகளுக்காக சுமார் 7 மில்லியன் ரூபா பெறுமதியான ரிக்கெற்று களை இலங்கை வாங்கியுள்ள போதிலும் அந்த ரிக்கெற்றுகளை பெற்றுக்கொண்டவர்கள் யார் என்பது மர்மமாகவுள்ளது.

முப்பதுக்கும் அதிகமானோருக்கு அன்பளிப்பு ரிக்கெற்களை இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு வழங்கியுள்ளதாக சண்டே டைம்ஸுக்கு அறிய முடிந்தது. எனினும் போட்டிகளில் இலங்கையர்கள் பங்குபற்றும்போது பார்வையாளர் அரங்குகளில் இலங்கையர்களை காண்பது அரிதாக இருந்தது.

7 மில்லியன் ரூபா பெறுமதியான ரிக்கெற்களை இலங்கை வாங்கியதாகவும் அவை விற்பை செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ கூறினார்.

பெயர்களை பெற்றுக்கொள்வதற்காக கோவையொன்றை எதிர்பார்த்துள்ளதாக அவர் வெள்ளிக்கிழமை தெரிவித்தார். எனினும் அத்தகவல்கள் கிடைக்கவில்லை என நேற்று அவர் கூறினார். வாங்கப்பட்ட ரிக்கெற்களின் எண்ணிக்கை தனக்கு நினைவிலில்லை என அவர் தெரிவித்தார்.


# இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் மோசடி

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பொருளாளர் நுஸ்கி மொஹ மட் அவருக்குச் சொந்தமான நிறுவனங்கள் இரண்டில் இருந்து கிரிக்கெட் உபகணரங்களைக் கொள்வனவு செய்துள்ளமை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. கிரிக்கெட் நிறுவனத்தின் பொருளாளர் நுஸ்கி மொஹமட்டுக்குச் சொந்தமான SVA Agencies, The Cricket Shop ஆகிய நிறுவனங்களில் இருந்த இந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவ்வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதிக்குள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்த உபகரணங்களின் மொத்த மதிப்பு 1.5 மில்லியன் ரூபாவாகும்.

இந்தக் கொள்வனவிற்கான கொடுப்பனவு காசோலைகள் மூலம் செலுத் தப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண் டுக்காக கிரிக்கெட் நிறுவனத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான கொடுப் பனவு இன்னமும் நிலுவையில் உள்ளன. இந்த நிலையிலேயே இவ்வாண்டில் கொள் வனவு செய்யப்பட்ட தமது நிறுவனத்திற் கான கொடுப்பனவுகள் மாத்திரம் செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.



அகில இலங்கைப் பலகலைக்கழக அணிகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கதை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அணியில் இடம்பெற்ற வீரர்கள் தமது பயிற்றுவிப்பாளர்கள் பணிப்பாளாருடன் காணப்படுகின்றனர்.



# பற்கள் - ஈறுகளைக் கவனிப்போம்

உடலின் பாகங்கள் குறித்துக் கவலைப்பட்டு, முழு உடல் பரிசோதனை செய்து கொண்டு அவற்றைச் சிறப்பாக பராமரிக்க மக்கள் தவறுவதில்லை. ஆனால் பெரும்பாலானோர் பற்கள் - ஈறுகள் குறித்துக் கவலைப்படாமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது.

பற்கள், ஈறுகள் குறித்து பொது மக்கள் மட்டுமின்றி மருத்துவ மனைகள்கூட போதிய அக்கறை செலுத்துவதில்லை. மாஸ்டர் செக் - அப் என முழு உடல் பரிசோதனை வசதிகளை வைத்துள்ள பல மருத்துவமனை கள், பல் நலத்தில் உரிய கவனம் செலுத்துவதில்லை.

பல் பிடுங்குவதற்கு மட்டுமே **"பல் மருத்துவம்"** எனக் கருது வது சரி அல்ல. பற்கள், ஈறுகளை முறையாகப் பராமரித்து பற்களை கடைசி வரை தக்க வைத்துக் கொள்ள உதவுவதுதான் பல் மருத்துவம்.

அல்லது ஈறு நோய் என்றால் பல் தானே என்ற அலட்சியம் பலரிடம் உள்ளது. இனி அத்த கைய அலட்சியம் வேண்டாம்.

ஏனெனில் ஈறு நோய்க்கும் இதய நோய்க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக ஆராய்ச்சி யில் தெரியவந்துள்ளது. அதாவது, ஈறு நோய்க்கும் இதய நோய்க்கு வித்திடும் இரத்த நாளங்களின் குறுகலுக்கும் தொடர்பு இருப்பது நிரூபணமாகியுள்ளது.

### ஈறு நோய் - அறிகுறிகள் என்ன?


பற்களிடையே தங்கிக் கொள்ளும் உணவுப் பொருள்கள், சில வகை பாக்டீரியாக்களால் உருவாக்கப் படும் ஒரு வகை அசுத்த கொழுப்பு பற்களைச் சுற்றிப் படிகிறது. இதை ஆரம்பகட்ட ஈறு நோய் என்று கூறலாம்.

வழக்கமாக "பிங்க்" நிறத்தில் இருக்கும் ஈறுகள், சிவப்பு நிற மாகக் காட்சி அளிப்பதும் பல் துலக்கும்போது ரத்தக் கசிவு தீவிர ஈறு நோயாக மாறிவிடும். இதன் மூலம் தாடை எலும்பில் நோய் பரவி பாதிப்பு ஏற்படும். மேலும் இது இதய நோயாகவும் உருவெடுக்கும்.

### இரத்த நாள குறுக்கம் ஏன்?

இதயத்துக்கு ரத்தத்தை அனுப்பும் இரத்த நாளங்கள் கொழுப்புச் சத்தால் அடைக்கப் பட்டு, குறுகிய பாதையாகச் சிதைவடைவதுதான் இதய நோயாக உருவெடுக்கிறது.

இவ்வாறு நாளங்களில் கொழுப்பு படியும்போது இரத்த நாளங்க ளின் சுவர்களும் பாதிக்கப்பட்டு, ஒட்சிசன் மற்றும் சத்துப் பொருள் கள் பற்றாக்குறையால் இதயம் பாதிக்கப்படும். மாரடைப்பு ஏற் படக்கூடும். இப்படி கடுமையான பாதிப்பை தரக்கூடிய இதய நோய்க்கும் ஈறு நோய்க்கும் தொடர்பு இருக்கிறது என்ற அதிர்ச்சியான தகவல் பல ஆய்வுகள் மூலம் நிரூபணமாகி யுள்ளது.



# ஆரோக்கிய நாதம்

### இதயத்துடன் தொடர்பு:

இரத்தத்தில் அதிக கொழுப்புச் சத்து, உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன் ஆகியவை குறித்து மக்கள் அதிகம் கவலைப்படு கின்றனர். ஏனெனில், இந்தப் பிரச்சினைகள் இதயத்தைப் பாதித்து உயிரைப் பறித்துவிடும் என்ற பயம்தான்.

ஆனால் பல்லில் பிரச்சினை ஏற்படுவதும் ஈறு நோய்க்கான அறிகுறிகள். இப்படி பற்களில் படியும் கடினமான கொழுப்புப் பொருள்களை பல் துலக்கும் பிரஷ் மூலம் அகற்ற முடியாது.

இந்தக் கொழுப்பு படிப்படியாக இறுகி, மஞ்சள் கலந்த கடின படிமமாக உரு மாறும். நாள்கள் செல்லச் செல்ல, இந்தப் படிமம் ஆழமாக இறுகி,

### ஈறு நோய் காரணமாக..

ஈறு நோயை உருவாக்கும் பாக்டீரியா, இரத்த நாளங்களில் இரத்த ஓட்டத்தைப் பாதிக்கும். மேலும் எதிர்ப்புத் தன்மையற்ற ஈறுகளிலிருந்து வெளியாகும் பாக்டீரியாக்கள், இரத்தக் குழா யைச் சென்றடைந்து நாளங்க ளின் சுவர்களை வெப்பப்படுத் துவதால் நாளங்களில் தேவையற்ற சுருக்கம் ஏற்படுகிறது.

சில நேரங்களில் கொழுப்புகள் அடங்கிய இரத்த நாளங்களில் பாக்டீரியாக்கள் தங்களை நேரடி யாக இணைத்துக் கொள்வதாலும் இரத்த நாளங்களில் சுருக்கம் ஏற்படுவதாக ஆய்வுகள் நிரூபித் துள்ளன.

### ஈறு நோயைத் தவிர்க்க...

பற்களை தினமும் சரியாக துலக்காவிட்டால், ஈறு நோய் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

ஒவ்வொரு முறை உணவு சாப்பிட்ட பிறகு வாய் கொப்பளிப் பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

காலையிலும் இரவிலும் சரியான முறையில் பல் துலக்குங்கள்.

பல் மருத்துவரின் பரிந்துரையு டன் சரியான பற்பசையைப் பயன் படுத்துங்கள்.

நூல் மூலம் பல் இடுக்குகளைச் சுத்தம் செய்வது நல்ல பலனைத் தரும்.குறிப்பிட்ட இடைவெளியில் பல் மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறத் தவறாதீர் கள்.

## என்ன நோய் உங்களுக்கு?

### முகம் வீக்கமாக இருப்பது :

உடலில் தண்ணீர் இழப்பு அதிகமாக இருப்பது. இப்படி ஏற்படும்போது உடலுக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது. உடலுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்காமல் போனால், இரத்த செல்கள் விரிவடைந்து முகம் வீக்கமாகத் தெரியும்.

**தடுப்பு நடவடிக்கை:** ஒரு நாளைக்கு எட்டு கிளாஸ் தண்ணீராவது அருந்துவது அவசியம். எப்போதும் தண்ணீர் பாட்டிலை உடன் வைத்துக் கொண்டால் தண்ணீர் அருந்த வேண்டும் என்கிற உணர்வு ஏற்பட்டு அருந்துவீர்கள்.



### தோல் இளம் மஞ்சளாக மாறுவது :

கல்லீரல் நோய். கல்லீரல் பாதிப்படையும்போது உடலிலிருக்கும் பித்த நீர் போன்ற மஞ்சள் நிற திரவங்களை வெளியேற்ற முடிவதில்லை. இதனால் தோல் மஞ்சள் நிறத்திற்கு மாறுகிறது.

**தடுக்க:** அதிகப்படியான மதுசாரப் பாவனையால் இப்படி கல்லீரல் பிரச்சினை ஏற்படுகிறது. குடிப்பழக்கம் இருந்தால், உடன‌டியாக நிறுத்தி விடுவதே நல்லது. அல்லது செங்கமாரி போன்ற நோய் ஏற்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

## வாய்ப் புற்றுநோய்

### வாய்ப் புற்றுநோய்

வயது முதிர்ந்தோரை அதிகம் பாதிக்கப்படுகின்றது. புற்றுநோய் முன்னிலைகளான உயர்ந்து தென்படும் அகற்ற முடியாத வெண்ணிற / செந்நிற தழும்பு களை கண்ணாடியில் பார்த்து இனம் காணமுடியும். இவ்வாறு இனம் காணப்படுமிடத்து வைத்தி யரை நாடி குணமாக்கும் வகை யிலான பூரண சிகிச்சை பயனா ளிக்காதென்பது குறிப்பிடத்தக்கது.

### வாய்ப்புற்று நோய் ஏற்படுத்து வதற்கு ஏதாவது காரணிகள்

1.வெற்றிலை, பாக்கு, சுண் ணாம்பு, புகையிலை போன்ற வற்றை மெல்லுதல்
2.பீடி, சுருட்டு, சிகரெட் புகைத்தல்
3.ஒழுங்கற்ற வாய்ச் சுகாதாரம்
4.மதுபானம் அருந்துதல்
5.பின்வரும் சர்ந்தர்பங்களில் மீண்டும் மீண்டும் ஏற்படும் உறுத்தலினால் உண்டான புண்.
- கூரான உடைந்த பற்கள்
- சரியான அளவில் செய்யப்படாத செயற்கைப் பற்கள்


6. அதிகளவான மிளகாய், மிளகாத் தூள் பாவித்தல்
7. பீடை கொல்லி போன்ற இரசாயனப் பதார்த்தங்களினை அதிகளவில் பாவித்தல்
8. சூரிய ஒளியின் UV கதிர்களின் தாக்கம்- குறிப்பாக உதடுகளில் ஏற்படும்.
9. போசாக்கு குறைபாடு

வாய்ப்புற்று நோயின் அறிகுறிகள்

* ஆறாத வாய்ப்புண்
* வாயினுள் தடித்துக் காணப்படும் வெள்ளை, சிவப்பு நிறமான தழும்புகள்
* வாய்க்குழியின் கவசத்தோல் கழன்று போதல்
* உதடுகளிலோ, வாயினுள்ளோ வளரும் தசைத் துண்டுகள்
* வழமைக்கு மாறான இரத்தக் கசிவு
* மெல்லுதலிலும் விழுங்குத லிலும் ஏற்படும் சிரமம் அல்லது வலி
* தெளிவான காரணங்கள் அற்ற நிலையில் பற்களின் உறுதி தளருதல்
* தாடையை அசைப்பதில் சிரமம்
* வாய்க்குழி உணர்வற்றுப் போதல்
* கழுத்துப் பகுதியில் நிணநீர் முடிச்சுக்கள் வீங்குதல்

### நீங்களே உங்கள் வாயைப் பரிசோதிக்கலாம்

* உங்கள் கைகளை சுத்தமாகக் கழுவுங்கள்
* முகம் பார்க்கும் கண்ணாடி முன்பாக நில்லுங்கள்
* உங்கள் முகத்தில் ஏதேனும் வீக்கங்கள், கட்டிகள், புண்கள் உள்ளனவா என விரல்களின் நுனியினால் சோதித்துப் பாருங்கள். முகம் சமச்சீராக உள்ளதா என கவனியுங்கள்
* உங்கள் மேல், கீழ் உதடு களை நன்கு இழுத்து அவற்றில் வெள்ளைப் புள்ளிகள், வீக்கங்கள் அல்லது கட்டிகள் உள்ளதா என கவனியுங்கள்.
* உங்கள் முரசுகளில் ஏதேனும் நிறமாற்றங்கள், வீக்கங்கள், கட்டிகள், புண்கள், இரத்தக்கசிவு என்பன.



இத்தனையும் தவிர எழுதவும் படிக்கவும் மற்ற மிருகங்களுக்குச் சொல்லித் தருவதற்காக வகுப்புகளும் நடத்தி வந்தது அது. மொத்தத்தில் சொல்லப் போனால் இந்த முயற்சிகள் எல்லாம் பெரும்பாலும் தோல்வியுற்றன என்றே சொல்ல வேண்டும்.

உதாரணமாக எலிகளையும், முயல்களையும் பழக்கி, வீட்டு மிருகங்களாக்கும் முயற்சி ஆரம்ப முதலே தோல்வியுற்றது என்றுதான் சொல்ல வேண்டும். அவை இந்தக் கமிட்டி செய்த எந்த முயற்சிகளையும் லட்சியம் செய்யாமல் எப்போதும் போலவேதான் நடந்து கொண்டன. தாராளத்துடன் அவற்றிற்கு ஏதாவது கொடுத்தால், வாங்கிக் கொண்டு நகர்ந்துவிடுமே தவிர, அதற்காக எவ்வித நன்றியும் பாராட்டாது. பூனை கூட இந்தக் கமிட்டியில் சேர்ந்து கொண்டு கொஞ்சநாள் மிகவும் சுறுசுறுப்பாக உழைத்தது. ஒரு நாள் அது கூரை மேல் உட்கார்ந்து கொண்டு தன் கைக் கெட்டாத தூரத்திலிருந்த சில




சிட்டுகளுக்கும் பாடம் சொல்லித் தருகிற காரியத்தில் முனைந்திருந்தது.

இப்போது எல்லா ஜந்துக்களும் தோழர்கள்தான் என்றும், தன்மேல் வந்து எந்தச் சிட்டும் எந்தச் சமயம் வேண்டுமானாலும் பயமின்றி உட்காரலாம் என்றும் அது சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் அந்தப் பறவைகள் தூரத்திலேயே இருந்து விட்டன. நெருங்கி வர அவை பிரியப்படவில்லை.


எழுதப்படிக்கச் சொல்லித் தருகிற வகுப்புக்கள் வெற்றிகரமாகவே நடந்தன என்று சொல்ல வேண்டும். இலையுதிர்காலம் வரும்போது பண்ணையிலிருந்து விலங்குகளில் அநேகமாக எல்லாமே ஓரளவுக்குக் கல்வியறிவு பெற்றுவிட்டன. பன்றிகளைப் பற்றிய வரையில் அவை நன்றாகவே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டன.

நாய்களும் சுமாராகப் படிக்கக் கற்றுக் கொண்டன. ஆனால் அந்த ஏழு விதிகளைத் தவிர வேறு எதையும் படிப்பதில் அவற்றிற்கு அக்கறை உண்டாகவில்லை. முரியல் என்கிற ஆடு நாய்களை விட நன்றாகவே படிக்கக் கற்றிருந்தது.

மாலை வேளைகளில் சில சமயம் குப்பை மேடுகளில் கிடந்த பத்திரிகைத் துணுக்குகளைப் பொறுக்கிவந்து அது மற்ற விலங்குகளுக்கு வாசித்துக் காட்டும். பெஞ்சமினால் பன்றிகளைப் போலவே நன்றாகப் படிக்க முடியும். ஆனால் படிக்கிற காரியத்தை அது செய்வதில்லை. படிப்பதற்குத் தகுதியான விஷயம் எதுவும் இல்லை என்பது அதன் அபிப்பிராயம்.

(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



# செய்வன திருந்தச் செய்!



சிற்பி ஒருவர் சிற்பம் செதுக்கிக் கொண்டிருந்தார். அருகில் சென்று ஒருவர் அவர் கலைச்செயலை, அவர் தம் ஈடுபாட்டை உன்னிப்பாக கவனித்தார். பின்னர், அவர் திரும்பிப் பார்த்த பொழுது மெல்ல அவரிடம் கேட்டார்.

"என்ன சிலை செய்துக்கிட்டு இருக்கீங்க?"

"பிள்ளையார் சிலை" என்று பதில் வந்தது.

மீண்டுமொரு கேள்வி "இந்த சிலையை எங்க வைக்கப்போறீங்க?"

பொறுமையாக பதில் சொன்னார் கலைஞர் "அந்த கோபுரத்தின் உச்சியில், வலது பக்கத்தில்" என்று சுட்டிக் காட்டினார். "பக்கத்துல பிள்ளையார் சிலை இன்னொண்ணு இருக்கே, மறுபடியும் ஏன் பண்றீங்க?" என்று கேட்டார்.

"இதுவா! அதில பழுது ஏற்பட்டிருக்கு!" என்று சொன்னார்.

கூர்ந்து கவனித்த பார்வையாளர் "கண்ணுக்குக் குறை ஒண்ணும் தெரியலையே!" என்றார்.

கலைஞர் "பிள்ளையாரோட தும்பிக்கைல, நடுல ஒரு கீறல் விழுந்துடிச்சு" என்றார்.

உற்றுப்பார்த்த பார்வையாளர் "இவ்வளவு பக்கத்திலே இருக்கிற என் கண்ணுக்குக் தெரியல, அவ்வளவு உயரத்தில வச்ச பிறகு யாருக்குத் தெரியும்?" என்று தன் சந்தேகத்தை தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சிற்பி "இரண்டு பேருக்குத் தெரியும். எனக்கும், பிள்ளையாருக்கும்" என்று கூறி முடித்து கவனமாக சிலை செதுக்குவதைத் தொடர்ந்தார்.

வண்ணம் தீட்டுங்கள் :



# சிறுவர் அமுதம்




தவறு செய்து விட்டோம் என்று தெரிந்தும், அதை ஒப்புக்கொள்ள வெட்கப்படாதே - ஆவ்பரி

எமது நாட்டிலுள்ள இரண்டு நீளமான ஆறுகள்
மகாவலி ஆறு 335 கி.மீற்றர் நீளமானது. அருவி ஆறு 164 கி.மீற்றர் நீளமானது.

**கேள்வி:**

ஒரு சிறுவன் 8 சிலந்திகள் மற்றும் வண்டுகளையும் பிடித்து ஒரு பெட்டியில் போடுகிறான். கால்களை எண்ணுகிறான். மொத்தம் 54 கால்கள் இருந்தன. அப்படியானால் சிறுவன் பிடித்த சிலந்திகள் எத்தனை வண்டுகள் எத்தனை?

## சின்னச் சின்ன மோட்டார்



சின்னச் சின்ன மோட்டார்
சிங்கார மோட்டார்
நான்கு சக்கர மோட்டார்
நாங்கள் ஏறும் மோட்டார்
பாம் பாம் மோட்டார்
பாய்ந்து செல்லும் மோட்டார்

## விடுகதைகள்




1)மாலையிலே சாலையிலே மலரும் பூ, காலையில் வெளிச்சம் வந்தால் கண் மூடும் பூ - அது என்ன பூ?
2)நாலு குழித்தட்டு, இட்லித் தட்டுமல்ல, நல்ல இரும்புத் தட்டு பணியாரச் சட்டியுமில்லை போரிலே வீரனைக் காக்கும் கவசமுமல்ல - அது என்ன?
3)சீமையிலே செஞ்ச சின்னதுரை, சின்ன மாளிகைக்கு நல்ல காவல்காரனாம் - அவன் யார்?
4)செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல சிங்காரிக்க உதவும் சீப்புமல்ல - அது என்ன?
5)வயிறு நிறையச் சாப்பிட்டால், வானத்தில் பறப்பான் - அவன் யார்?

விடைகள்:
1.அந்தி மந்தாரை 2.கேடயம்
3.பூட்டு 4.கண்ணாடி
5.பட்டம்

**சுடோக்கு எண் 23 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 2 | 6 | 8 | 4 | 3 | 5 | 1 |
| 5 | 4 | 1 | 3 | 9 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 8 | 6 | 1 | 7 | 5 | 9 | 4 | 2 |
| 2 | 7 | 5 | 8 | 6 | 1 | 4 | 3 | 9 |
| 8 | 6 | 3 | 4 | 2 | 9 | 5 | 1 | 7 |
| 4 | 1 | 9 | 5 | 3 | 7 | 6 | 2 | 8 |
| 9 | 3 | 7 | 2 | 5 | 8 | 1 | 6 | 4 |
| 1 | 5 | 8 | 9 | 4 | 6 | 2 | 7 | 3 |
| 6 | 2 | 4 | 7 | 1 | 3 | 8 | 9 | 5 |

**சுடோக்கு எண் 24**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 1 | | 2 | |
| 9 | 8 | | | | | | | |
| | | | 4 | | | 8 | | 5 |
| 3 | | | 2 | | | | | 9 |
| | | 8 | | | | 3 | | |
| 1 | | | | | 5 | | | 7 |
| 7 | | 5 | | | 3 | | | |
| | | | | | | | 3 | 6 |
| | 2 | | 7 | | | | 1 | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## நாவுக்கரசர் குருபூசை வைபவம்


(படம்: மருதனார்மடம் நிருபர்)

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நாவுக்கரசர் குருபூசை விழாவின்போது அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பஞ்சபுராணம் ஓதுவதையும், அருகில் தலைவர் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன், கிராம சேவை யாளர் க. ஸ்ரீஸ்கந்தராசா, பிரதமகுரு சிவஸ்ரீ சோ. இ. பிரண தார்த் திகரக் குருக்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## சமய அறிவுப் போட்டி

உடுவில்

சர்வதேச இந்து மத குருபீடத்தின் 15ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு சர்வதேச இந்து மத குருபீடம், சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் என்பன இணைந்து மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்து ள்ளது.


இந்தப் போட்டி நாளை (புதன் கிழமை) காலை 9.00 மணிமுதல் யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் 7ஆம் 8ஆம், 9ஆம் தரங்களில் கல்விபயிலும் மாணவர்களுக்கு பிரிவு ஒன்றாகவும், 10ஆம், 11ஆம், 12ஆம் தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பிரிவு இரண்டாகவும் போட்டி நடாத்தப்படுகிறது.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களும் மேலும் நூறுபேருக்குச் சிறப்புப் பரிசில்களும் வழங்கப் படவுள்ளன. (01)

## நல்லைக் கந்தன் மகோற்சவம்

இன்று பதினைந்தாம் நாள்



### எந்நாளும் நல்லூரைப் போற்று!

அன்புடனே எந்நாளும் நல்லூரை நாடு
அன்புடனே எந்நாளும் நல்லூரைப் பாடு
அன்புடனே எந்நாளும் நல்லூரைப் போற்று
அன்புடனே எந்நாளும் அவனுனைக் காப்பான்!

*-சைவப் புலவர் ஜனகர் சிவசுப்பிரமணியம்.*

### கண்டாற் பிறவி ஒழிந்திடுமே

கண்ணா நிரண்டுந் திருமுக மாறுங் கதிர்முடியுந்
தண்ணார் கருணை முறுவலுந் தையலர் பாகமுமாய்
விண்ணா டருந்தொழும் நல்லை வியன்பாற் கடனடுவே
உண்ணா வமுதுண்டு கண்டாற் பிறவி யொழிந்திடுமே!

*-நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர்*

### நல்லூரிற் கந்தப்பா போற்றி!

சீரான படையாறில் திகழ்வாய் போற்றி
சிவகுருவாய் உபதேசம் செய்தாய் போற்றி
பேரான சிவசோதிப் பிழம்போ போற்றி
பேணுபுவி யத்தனைக்கும் பெரியோய் போற்றி
கூரான வேல் பிடித்த குமரா போற்றி
கொக்கரிக்கும் செஞ்சேவற் கொடியாய் போற்றி
நாரா யணன்மகிழும் மருகா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி!

## யாழ்விருது வழங்கி கௌரவிப்பு



யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் நயினை அமுதசுரபி அன்னதான சபைக்கு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மாநகரசபையின் யாழ்விருது வழங்கிக் கௌரவிப்பதைதையும், கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு சான்றிதழ் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். (ப)

## ஆறுபடை வீடுகளுக்கு அதிபதியாகப் பெருமைபெறும் முருகப் பெருமான்

**கதிரமலை**

கதிர்காமம் (சிங்களத்தில் கதரகம) என்ற சொல்லுக்கு அர்த்தமுண்டு. கதிர் என்றால் கதிரோன் கதிர்கள். காமம் என்றால் அன்பின் அரவணைப்பு. ஏழுமலைகளின் மத்தியில் உள்ள மலையை தமிழ் மக்கள் "சுவாமி மலை" என்று அழைப்பர். இதை சிங்கள மக்கள் "வேதிகித்தி கந்த" என்பர். இம்மலையில்தான் வேதியர் யாக மண்டபம் அமைந்திருந்தது. இம்மண்டபத்திலிருந்தே வேதியர் வேத மோதினர். அக்கினி குண்டத்திலே நைவேத்தியங்களை அர்ப்பணித்து யாகம் செய்விப்போரின் பாரிய முயற்சிகள் வெற்றி பெறுமாறு தேவாதி தேவர்களை வேண்டினர். இதை தமிழில் யாகம் என்பர். பிராமண சிரேஷ்டர்கள் அமர்ந்து வேதம் ஓதும் இடமே யாகமேடை அல்லது யக்ஞ மண்டபம் எனப்படுகிறது.



**கலியுகத்தை தோற்றுவித்து காப்பவன்**

"கந்த", "கலியுக வரத" என வழங்கும் சகாப்தம் வரலாற்றுச் சிறப்புள்ளது. அக்கிரமம் புரிந்த அசுரரை தேவசேனாதிபதி கந்தவேள் சங்காரம் செய்ததிலிருந்தே கலியுகம் பிறந்தது. பௌத்த வருடமும் கிறீஸ்து வருடமும் எப்படி புத்தரும் இயேசுவும் தத்தம் மதங்களை ஸ்தாபித்ததிலிருந்து எழுந்தவையோ அதே போல் கலியுகமும் கந்தவேளின் வெற்றியை குறிப்பதாகும்.

**கந்தன் பெருமை**

கந்தப் பெருமானைப் பற்றிய திருப்பாடல்கள், தோத்திரங்கள், கீர்த்தனங்கள் எல்லாம், "இவனே தமிழ்! இவனே தமிழ்தந்த தெய்வம்! இவனே தமிழின் சுவை! இவனே முத்தமிழ்ப் புரவலன்! சங்கத் தமிழின் தலைமைப் புதல்வன்! முத்தமிழால் செந்தமிழ் நூல்வரித்தோன்! வைதாரையும் வாழவைப்போன்! என்று துதி பாடுகின்றன. தமிழ்மொழி இன்றும் நிலைத்திருப்பதின் காரணம் கந்தனின் வெற்றியே என்று இன்றும் ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

**முருகன் நாமம்**

தான் மறந்தாலும் நா மறக்காமல் சொல்லும் நாமம் "முருகா" என்பதே. சைவத் தோத்திரப் பாடல்களிலும் திருப்புகழிலும் வரும் அவன் திருநாமங்களில் முருகா என்ற நாமமே அடிக்கடி வருகின்றது. வேடுவர் குலத்தைச் சேர்ந்த வள்ளியை மணம் புரிந்த பிற்பாடே "கந்தன்" "முருகன்" என்ற பெயரால் அவன் அழைக்கப்படுகிறான். அநேகமாக எல்லா திருவிழாக்களிலும் முருகன் பவனி வரும்போது வள்ளி நாயகி யும் கூடவே வருகிறாள்.

தஞ்சைப் பெரிய கோயிலில் வள்ளி மணாளகலைக் கூடமேயுண்டு. கி.பி.13ஆம் நூற்றாண்டில் இது அமைக்கப்பட்டிருக்கலாம். வருடா வருடம் நிகழும் வள்ளி காந்தன் விழாக்களுக்கு ஆண்களும் பெண்களுமாக ஏராளமானோர் செல்வார்கள். முருகன் பெயர் ஒலிக்காத விழாக்களே இல்லை யென்று சொல்லலாம். கந்தன், முருகன் என்ற நாமங்கள் கொண்ட கோயில்கள் பல.இந்து மக்கள் பெரிதும் யாசிப்பது கந்தன் கருணையையே.

## இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று சைவப்புலவர் கு.பாலசண்முகன் "குருவாய் வருவாய்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை மற்றும் ஏழாலை களவாவோடை நாகபூஷணி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளுடன் செல்வன் வசந்த குமார் வழங்கும் பண்ணிசை விருந்தும் இடம்பெறவிருக்கின்றன. (க)

******************************************************

### துர்க்காதேவி மணி மண்டபத்தில்

நல்லூர் இளங் கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று செல்வி சுஷ்மா சோமசேகர் (மலேசியா) வழங்கும் இன்னிசை இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின் போது எஸ்.கோபிதாஸ் (வயலின்), கே.கஜன் (மிருதங்கம்), பிரம்மஸ்ரீ சிவசுந்தரசர்மா (கெஞ்சிரா) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள். (க)

******************************************************

### நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில்

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் நிகழ்ச்சித் தொடரில் இன்று சிறப்பு அம்சமாக புராண படனம் இடம்பெறுகின்றது. "கந்தபுராணத்தில் திருப்பெரு வடிவம்" என்ற பொருளில் நடைபெறும் புராண படன நிகழ்வில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன், சக்திதாசர் நா.இராதகிருஷ்ணன், சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.


சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்ச்சி மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். (க)

# செவ்வாயில் வெற்றிகரமாக ரோவர் விண்கலம் தரையிறங்கியது! நாசா விஞ்ஞானிகள் சாதனை

செவ்வாயில் வெற்றிகரமாக ரோவர் விண்கலம் தரையிறங்கியது.

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக அமெரிக்கா அனுப்பிய ரோவர் விண்கலம் கிட்டத்தட்ட 8 மாத பயணத்திற்கு பிறகு நேற்று (06.08.12) வெற்றிகரமாக தரையிறங்கியது. விண்வெளி ஆய்வு மையத்தில் இது ஒரு மிகப்பெரிய மைல்கல்லாக கருதப்படுகிறது.

பூமியில் இருந்து சுமார் 570 மில்லியன் கி.மீ., தொலைவில் உள்ளது செவ்வாய் கிரகம். இந்த கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான ஏற்ற சூழல் இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்ய அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. செவ்வாய் கிரகம் தொடர்பான படங்களையும் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது. மேலும் செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும், அதற்கான படங்களையும் வெளியிட்டது நாசா. இதனையடுத்து செவ்வாய் கிரகத்தை பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளவும், அதில் உயிர்கள் வாழ்வதற்கு தேவையான சூழல் இருக்கிறதா என்பது பற்றி ஆய்வு செய்யவும் ரோவர் என்ற புதிய விண்கலம் ஒன்றை உருவாக்கியது நாசா விண்வெளி மையம். கடந்த ஆண்டு, நவம்பர் மாதம் 26ம் திகதி அமெரிக்காவின் கேப் கேனரவல் விண்வெளி மையத்தில் இருந்து அட்லஸ் ரொக்கெட் மூலம் ரோவர் விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.



வெற்றிகரமாக விண்ணில் தரையிறக்கம்: ரோவர் அனுப்பப்பட்டு சரியாக 8 மாத பயணத்திற்கு பின்னர் நேற்று (6ம் தேதி) திங்கட்கிழமை, செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது. செவ்வாய் கிரகத்தின் புவிவட்ட பாதைக்குள் ரோவர் விண்கலம் நுழைந்ததும், அதிலிருந்து க்யூரியாசிட்டி வாகனம் செவ்வாயில் தரையிறங்கியது. இந்திய நேரப்படி காலை 11.12 மணியளவில்) ரோவர் தரையிறங்கியது.

# அமெரிக்காவில் சீக்கிய கோவிலில் மர்ம மனிதன் துப்பாக்கி சூடு: 7 பேர் பலி



அமெரிக்காவில் சீக்கியர்களின் கோயிலான குருத்வாராவில் மர்ம நபர்கள் புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 7 பேர் பலியாயினர். இந்த சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பீதியில் உறைந்து போயினர்.

அமெரிக்காவில் கடந்த இரு வாரங்களுக்கு முன் சினிமா தியேட்டரில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தின் சுவடு மறைவற்குள் சீக்கிய கோயிலான குருதுவாராவில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் அமெரிக்கர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

அமெரிக்காவின் விஸ்கோன்சின் மாகாணத்தின் ஓ-கிரீக் நகரின் மில்வயூக்கி பகுதியில் சீக்கியர்களின் கோயிலான குருத்வாரா உள்ளது.

இக்கோயிலில் நேற்று அமெரிக்க உள்ளூர் நேரப்படி காலை 10.30 மணியளவில் இரு நபர்கள் துப்பாக்கியுடன் திடீரென புகுந்து அங்கிருந்தவர்கள் மீது சராமாரியாக சுட்டனர்.

இதில் 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த துப்பாக்கிச்சூட்டில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிசார் பதில் தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டான். இந்த தாக்குதலில் 7 பேர் பலியாயினர். எனினும் தொடர்ந்து கோயிலுக்கு எஞ்சியிருந்த மர்ம ஆசாமி, துப்பாக்கி முனையில் பலரை பிணைக் கைதியாக பிடித்து வைத்துள்ளான்.

மேலும் பொலிசார் வரவழைக்கப்பட்டு கோயிலுக்குள் எஞ்சி உள்ளவர்களை உயிருடன் மீட்க முயற்சி செய்து வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து அந்நாட்டு புலனாய்வு அமைப்பு விசாரணையை தொடக்கி உள்ளது. அமெரிக்காவின் புலானய்வு அமைப்பான எப்.பி.ஐ சம்பவ இடத்தினை பார்வையிட்டு தனது முதல்கட்ட விசாரணையை தொடங்க உள்ளது.

குருத்வாரா கோயில் துப்பாக்கிச்சூட்டிற்கு ஜனாதிபதி ஒபாமா கண்டனம் தெரிவித்துள்ளார். கடந்த இரு வாரங்களில் இரண்டாவது முறையாக இது போன்ற சம்பவம் நடந்துள்ளது வருத்தத்திற்குரியது என்றார்.

# புனித பயணம் மேற்கொண்ட யாத்திரிகர் 48 பேர் ஈரானில் கடத்தல்

சிரியாவில் புனித பயணம் மேற்கொண்ட 48 ஈரானியர்கள் பேருந்துடன் கடத்தப்பட்டதால், பதற்றம் ஏற்பட்டுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத் பதவி விலக கோரி கடந்த 17 மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது.

போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

தினமும் அங்கு இருதரப்புக்கும் இடையில் கடும் மோதல் நடை-பெற்று வருகிறது. இந்நிலையில், டமாஸ்கஸ் புறநகர் பகுதியில் உள்ள சயீதா ஜெய்னாப் மசூதிக்கு ஈரானை சேர்ந்தவர்கள் புனித பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த மசூதி ஷியா பிரிவு முஸ்லிம்களின் புனித தலமாக உள்ளது.

மசூதிக்கு வரும் ஈரானியர்களிடம் வழிப்பறிகளும் நடந்தன. மசூதிக்கு செல்ல ஈரான் யாத்திரிகர்கள் 48 பேர் நேற்று ஓட்டலில் இருந்து பேருந்தில் புறப்பட்டனர். அப்போது டமாஸ்கஸ் புறநகர் டடாமன் பகுதியில் பயங்கர ஆயுதங்களுடன் வழிமறித்த மர்ம ஆசாமிகள் ஈரானியர்களை பேருந்துடன் கடத்தி சென்றனர். இதனால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.டுள்ளது.

உடனடியாக இராணுவத்தினர் ஹெலிகாப்டர்களில் அந்த இடத்தில் தேடுதல் வேட்டை நடத்தினர். எனினும் ஈரானியர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. தொடர்ந்து தேடுதல் வேட்டை நடக் கிறது.

ஏற்கனவே கடந்த பெப்ரவரியில் 11 ஈரானியர்களை போராட்டக்காரர்கள் கடத்தினர். அவர்களில் 2 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டனர். அதே போல் ஜனாதிபதி அசாத் அரசுக்கு உதவி செய்ததாக கூறி 7 ஈரான் பொறியியலாளர்கள் கடத்தப்பட்டனர். அவர்களில் 4 பேர் மட்டும் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக பார்வை

## அமெரிக்கா - துருக்கி உறவில் விரிசலை ஏற்படுத்தி உள்ள ஒபாமாவின் புகைப்படம்



துருக்கி பிரதமர் தையிப் எர்டோகனிடம், சிரியா விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொலைபேசியில் பேசியது போது எடுக்கப்பட்ட புகைப்படம் பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.


துருக்கி பிரதமர் தையிப் எர்டோகனுடன் தொலைபேசியில் பேசும் போது, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இடக்கையில் போனையும், வலக்கையில் பேஸ்பால் மட்டையையும் பிடித்துள்ளவாறு பேசி யுள்ளார்.

இதை ஒபாமாவின் விளம்பரக் குழு புகைப்படம் எடுத்து அமெரிக்க - துருக்கிய உறவு மேம்படும் என்ற எண்ணத்தில் வெளியிட்டது. ஆனால் அதற்கு நேர்மாறாக இருக்கும் உறவும் சிக்கலாகிவிட்டது.

துருக்கியின் குடியரசு மக்கள் கட்சியைச் சேர்ந்த தலைவர் மெதின் லூட்பி பைதர் கூறுகையில், நாட்டை ஆள எங்கள் பிரதமர் யாரிடம் இருந்து உத்தரவுகளைப் பெறுகிறார் என்பதை அந்த புகைப்படம் வெளிப்படுத்துகிறது என்றார்.

இந்த புகைப்படம் துருக்கி மற்றும் அதன் குடிமக்களுக்கு பெருத்த அவமதிப்பாகும் என்று துருக்கிய தலைவர் உமுத் ஒரான் தெரிவ-ித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கெய்ட்லின் ஹேடன் கூறுகையில், துருக்கி பிரதமருடன் ஒபாமாவுக்கு உள்ள நட்பை வெளிப்படுத்தவு[illegible] சிரியா விவகாரம் குறித்து இரு நாட்டு தலைவர்களும் பேசியதை தெரிவிக்கவே இந்த புகைப்படத்தை வெளியிட்டோம். ஆனால்அது வேறு விதமாகிவிட்டது என்றார்.



மேரிலாண்ட், தேர்தல் பிரச்சாரத்திற்கு இடைவெளி கொடுத்து விட்டு தனது பிறந்தநாளை கொண்டாடி, ஆண்ட்ருஸ் விமான தளத்திலிருந்து புறப்பட்ட அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா.

## விமானம் புறப்பட்டவுடன் திடீரென கீழே குதித்த பயணியால் பரபரப்பு

விமானம் கிளம்பும் போது திடீரென பயணி கீழே குதித்ததால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதனால் விமானம் புறப்படுவதற்கு தாமதமானது.

மலேசியாவின் மிரி மாவட்டத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தலைநகர் கோலாலம்பூருக்கு ஏர் ஏசியா ஏகே 5187 என்ற விமானம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.40 மணிக்கு புறப்பட்டது.

ஓடுபாதையில் வேகமாக ஓடிய விமானம் வானில் மேலெழும்ப இருந்த நேரத்தில், திடீரென பயணி ஒருவர் எமர்ஜென்சி கதவை திறந்து கொண்டு கீழே குதித்தார்.

அதை பார்த்த மற்ற பயணிகள் அலறினர். உடனடியாக பைலட்டுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விமானம் மீண்டும் ஓடு பாதையில் நிறுத்தப்பட்டது. அதற்குள் தகவல் அறிந்து பாதுகாப்புப் படை அதிகாரிகள் ஓடு பாதைக்கு விரைந்து வந்து, கீழே குதித்த பயணியை சுற்றி



வளைத்தனர்.

அதிர்ஷ்டவசமாக அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. உடனடியாக அவரை மிரி மருத்துவமனையில் சேர்த்தனர். அதன் பின், ஒரு மணி நேரம் தாமதத்துக்கு பின், விமானம் கோலாலம்பூர் புறப்பட்டது.

விமானத்தில் இருந்து குதித்தது குறித்து வாலிபரிடம் பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அவரை பற்றி பெயர் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# மோடியை பிரதமர் வேட்பாளராக்க கூடாது

## நிதிஷ் குமார் மிரட்டல்



அடுத்த லோக்சபா தேர்தலில், தே.ஜ.கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடியை நிறுத்த மாட்டோம் என, பா.ஜ., உறுதி அளிக்க வேண்டும் இல்லையெனில், தே.ஜ.கூட்டணியில் இருந்து வெளியேறத் தயங்க மாட்டோம், என, பீகார் முதல்வர் நிதிஷ் குமார் கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தே.ஜ.கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில், ஐக்கிய ஜனதா தளம் முக்கிய இடம் வகிக்கிறது. இந்த கட்சிக்கு 29 எம்.பி.க்கள் உள்ளனர். பீகாரில், ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ., கூட்டணி ஆட்சி நடக்கிறது. ஆனாலும், குஜராத் முதல்வர் நரேந்திர மோடி விவகாரத்தில், இரண்டு கட்சிகளுக்கும் இடையே, தொடர்ந்து கருத்து வேறுபாடு நிலவி வருகிறது.

பிரசாரம்: கடந்த 2010இல் பீகாரில் சட்டசபை தேர்தல் நடந்தபோது, அங்கு நரேந்திர மோடி பிரசாரம் செய்யக் கூடாது என, பீகார் முதல்வர் நிதிஷ் குமார், கடும் எதிர்ப்பு தெரிவித்தார். நரேந்திர மோடி பிரசாரத்தில் ஈடுபட்டால், தங்கள் கட்சிக்கு உள்ள ஓட்டு வங்கி பாதிக்கப்படும் என்பதால், நிதிஷ் குமார் இவ்வாறு கூறினார். இதையடுத்து, நரேந்திர மோடி, அங்கு பிரசாரம் செய்யவில்லை. இதற்கிடையே, வரும் 2014இல் நடக்கவுள்ள லோக்சபா தேர்தலில், தே.ஜ. கூட்டணி சார்பில், நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படலாம் என, தொடர்ந்து தகவல்கள் வெளியாகின. நிதிஷ் குமார், இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தார். சமீபத்தில் இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் அடுத்த லோக்சபா தேர்தலில், தே.ஜ.கூட்டணி சார்பில் பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்படுபவர், மதச் சார்பற்ற தலைவராக இருக்க வேண்டும் என்றார்.

# இந்திய செய்திகள்

## மாஜி விமானப் பணிப்பெண் தற்கொலை வழக்கில் அமைச்சர் மீது வழக்கு பதிவு



நாட்டின் தனியார் விமான நிறுவனமான MDLR Airlines இல் பணிப் பெண்ணாக கீதிகா ஷர்மா என்பவர் பணியாற்றி வந்தார்.

இவர் புதுடெல்லியின் வடமேற்கு பகுதியில் உள்ள தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார்.

இவ்விவகாரத்தை விசாரித்த டெல்லி பொலிஸார், கீதிகாவை தற்கொலைக்கு தூண்டியதாக அவர் வேலை பார்த்து வந்த விமான நிறுவனத்தின் உரிமையாளரும், அரியானா மாநில உள்துறை அமைச்சருமான கோபால் கண்டா மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.


மேலும் கோபால் கண்டாவின் மேலாளரான அருணா ஷர்மா மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அரியானா பொலிஸார், கீதிகா ஷர்மா சமீபத்தில் தனது விமான நிறுவன வேலையை ராஜினாமா செய்துள்ளார்.

ஆனால் அவர் மீண்டும் வேலையில் சேரும்படி அமைச்சர் கோபால் கண்டா கட்டாயப்படுத்தியுள்ளார். மேலும், தனது தற்கொலைக்கு கோபால் கண்டாதான் காரணம் என கீதிகா கடிதம் எழுதி வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீண்டும் வேலையில் சேரும்படி கீதிகாவை அமைச்சர் கோபால் கண்டா கட்டாயப்படுத்தியதாகவும், இல்லாவிட்டால் அவரை வேறெங்கும் வேலை செய்ய விடமாட்டோம்' என கோபால் கண்டா மிரட்டியதாகவும் கீதிகாவின் சகோதரர் கௌரவ் கூறியுள்ளார்.

# இந்திய கடற்படைக்கு அதி நவீன போர் விமானங்கள்



இந்திய கடற்படைக்காக அமெரிக்காவின் போயிங் நிறுவனம் இரண்டாவது அதி நவீன பி8-1 ரக போர் விமானத்தைத் தயாரித்துள்ளது.

இந்தியாவின் கடலோரப் பகுதி 7,500 கி.மீ நீளத்துக்கு விரிந்து பரந்துள்ளது. இதைப் பாதுகாக்கவும், கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் இந்தியக் கடற்படைக்கு அதிநவீன போர் விமானங்கள் தேவைப்படுகின்றன.

எனவே அமெரிக்கக் கடற்படையில் உள்ள பி8-ஏ போன்ற 8 அதிநவீன போர் விமானங்களைத் தயாரித்து வழங்கும்படி அந்நாட்டைச் சேர்ந்த போயிங் நிறுவனத்துடன் இந்தியா கடந்த 2009 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டது.

ரூ.11 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்த விமானங்களைப் பெறுவதன் மூலம் இந்தியப் பெருங்கடல் உள்ளிட்ட நமது கடற்பகுதிகளில் துல்லியமான முறையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

அதன்படி, முதலாவது பி8-1 ரக போர் விமானத்தை போயிங் நிறுவனம் ஏற்கெனவே தயாரித்து, சோதனை ஓட்டமும் செய்து முடித்துள்ளது.

தற்போது இதே ரகத்தைச் சேர்ந்த இரண்டாவது விமானத்தை அந்த நிறுவனம் தயாரித்துள்ளது. அமெரிக்கக் கடற்படையில் உள்ளது போன்ற இவ்வகை விமானத்தை வாங்கும் முதல் வெளிநாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் இந்தியக் கொடியும், அரக்கோணத்தில் அமைந்துள்ள ஐ.என்.எஸ்.ராஜாளி 'கடற்படை விமான தளத்தின்' சின்னமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

இந்த விமானம் விரைவில் சோதிக்கப்பட்டு, வெள்ளோட்டம் விடப்படவுள்ளது. மூன்றாவது விமானமும் தயாரிக்கப்பட்டு சோதித்துப் பார்க்கப்பட்ட பின், முதல் கட்டமாக அவை அடுத்த ஆண்டில் இந்தியாவுக்கு அனுப்பப்படும்.

அவற்றை அரக்கோணம் கடற்படை விமானப் படைத்தளத்தில் இந்திய பணியில் ஈடுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து போயிங் நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் விண்வெளிப் பிரிவின் திட்ட இயக்குநர் லேலாண்ட் வைட் கூறுகையில், முதலாவது பி8-1 ரக விமானத்தை நாங்கள் அடுத்த ஆண்டு மே மாதத்துக்குள் இந்தியாவுக்கு வழங்குவோம் என்று தெரிவித்தார்.

இந்த விமானங்களில் எதிரி நாட்டு நீர்மூழ்கிகளை அழிக்கும் வசதி, அதிநவீன ராடார்கள், ஏவுகணைகள், சக்தி வாய்ந்த குண்டுகள் ஆகியவற்றை இந்திய விமானப்படை தயார் நிலையில் வைத்திருக்கும்.

இது தவிர உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உளவுத் தகவல் சேகரிப்புக் கருவிகளும் அதில் பொருத்தப்படும். இந்த விமானத்தில் 9 பேர் பயணிக்க முடியும்.

தேவைப்பட்டால் இன்னும் சிலர் பயணிக்கும் வகையில் விரிவுபடுத்தும் வசதியும் உள்ளது குறிப்பிடத்தக்கது.



தென்மேற்கு பருவமழை பொய்த்து, தேனி மாவட்ட குளங்கள் வறண்டதால், கூடாரங்களை காலிசெய்த பறவைகள் வைகை அணையின் சொற்ப நீரை நம்பி முகாமிட்டுள்ளன.

## சுதந்திர தினத்தன்று குண்டு வெடிக்கும்: மர்ம மின்னஞ்சலால் பீதி

இந்தியாவின் சுதந்திர தினமான ஒகஸ்ட் 15ஆம் திகதி தலைநகர் புதுடெல்லியில் குண்டு வெடிக்கும் என்று வாலிபர் ஒருவர் அனுப்பிய மின்னஞ்சலால் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநில தலைமைச் செயலாளர் சி.கே.மேத்யூ உட்பட சில தலைமை செயலாளர்களுக்கு இந்த மின்னஞ்சல் நேற்றுமுன்தினம் வந்தது.

இதை அஜய் கஷ்யப் என்பவர் அனுப்பியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது, வரும் 15ஆம் திகதி சுதந்திர தினத்தன்று வெடிகுண்டு தாக்குதல் நடத்த பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் திட்டமிட்டுள்ளார்.

இந்த நபர் குறித்த சில தகவல்களையும் தனது மின்னஞ்சலில் அஜய் இணைத்து அனுப்பியுள்ளதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மின்னஞ்சல் அனுப்பியவரான அஜயை கண்டுபிடிக்கும் முயற்சியில் உளவுத் துறை களமிறங்கியுள்ளது.

ஏற்கனவே கடந்த முதலாம் திகதி புனே மாநகரில் தொடர் குண்டுவெடிப்புகளின் பீதி குறையாத நிலையில் இந்த மின்னஞ்சல் மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இலஞ்சம், ஊழலில் தான் தமிழகம் முன்னோடி

இலஞ்சம், ஊழலில் தான் தமிழகம் முன்னோடி மாநிலமாக உள்ளதாக, தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் குற்றம் சாட்டினார்.

கோவில்பட்டியில் நேற்று முன்தினம் இரவு அக்கட்சி பொதுக் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விஜயகாந்த் பேசியதாவது: மக்கள் பணி செய்ய விரும்பு கிறவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி, அவர்கள் மீதே வழக்கு பதிவு செய்கின்றனர். மணல் கொள்ளையில் மட்டுமே அ.தி.மு.க., - தி.மு.க., ஒற்றுமையாகச் செயல்படுகிறது. ஆனால், அந்த அரசுகள் மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றவில்லை.

இலஞ்சம், ஊழலில் தான் தமிழகம் முன்னோடி மாநிலமாக உள்ளது. வறுமை, வேலை வாய்ப்பின்மையும் இங்குள்ளது. விலைவாசி எகிறியுள்ளது. ஆனால், தமிழகம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சியில் முன்னேறியுள்ளதாக முதல்வர் ஜெ., கூறுகிறார்.

மின்வெட்டை போக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல், மின் கட்டணம் பன்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. முன்பெல்லாம் டேபிளுக்கு அடியில் வைத்து லஞ்சம் வாங்கிய பொலிஸார், தற்போது துணிச்சலாக டேபிளுக்கு மேல் வைத்தே லஞ்சம் வாங்குகின்றனர். பள்ளி மாணவர்களின் கல்வி உதவித்தொகையில் மோசடி செய்த 77 தலைமையாசிரியர்களை, சஸ்பெண்ட் செய்தது மட்டும் போதாது. மோசடி பணம் முழுவதையும் அவர்களிடமிருந்து வசூலிக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு விஜயகாந்த் பேசினார்.

# திடீரென தீ பிடித்து எரிந்த எக்ஸ்பிரஸ் ரயில்

## மக்கள் பதற்றம்

கர்நாடக மாநிலம் பெங்களூரில் இருந்து யஸ்வந்த்புரா-போத்பூர் எக்ஸ்பிரஸ் ரயில் புறப்பட்டது நேற்று அதிகாலை ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டம் சிந்தப்பூர் ரயில் நிலையத்திற்கு வந்து நின்றது.

அப்போது ஏசி பெட்டி திடீரென தீ பிடித்து எரியத் தொடங்கியது. அப்போது அந்த பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்த பயணிகள் அலறியடித்துக்கொண்டு எழுந்து வெளியே ஓடி வந்தனர்.

உடனே இது குறித்து சிந்தப்பூர் ரயில்வே பொலிசாருக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்பு படையினர் வரவழைக்கப்பட்டு தீயை அணைத்தனர். தீ உடனடியாக அணைக்கப்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

மின்கசிவு காரணமாகத்தான் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது என ரயில்வே துறையினர் தெரிவித்துள்ளனர். கடந்த மாதம் 30ம் திகதி நெல்லூர் அருகே அதிகாலை தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் 34 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்குள்ளாகவே இந்த ரயிலில் தீப்பிடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# மாலைதீவுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா உதவ தயார்

## மன்மோகன் சிங்


மாலைதீவுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு அந்நாட்டுடன் இணைந்து செயற்பட தயாராக இந்தியா உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

மாலைதீவுகளின் திவேஹி ரய்யித்துங் கட்சியின் தலைவர் அஹ்மது தஸ்மின் அலி கடந்த 31 ஆம் திகதி இந்தியா வந்தார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அஹ்மது, நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தார்.

அப்போது, மாலைதீவுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா உதவ தயாராக இருப்பதாகவும் அத்தீவுகளில் நிலவும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்திய பிரதிநிதிகள் உதவுவார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

# சாதனை மன்னன் தங்கத்துடன் ஓய்வு



அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் 400 மீற்றர் "மெட்லி" தொடர் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற கையோடு நீச்சலில் இருந்து ஓய்வுபெற்றார்.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற இப் போட்டியில் மட் கிரீவர்ஸ், பிரென்டன் ஹன்சென், மைக்கேல் பெல்ப்ஸ், அட்ரியான் ஆகியோர் அடங்கிய அமெரிக்க அணி 29.35 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

தனது கடைசிப் போட்டியில் தங்கம் வென்ற கையோடு ஓய்வு முடிவையும் அறிவித்த 27 வயது பெல்ப்ஸ், "நான் விரும்பும் எதையும் என்னால் சாதிக்க முடியும்" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

"நீச்சல் குளம் மற்றும் ஹோட்டல் அறைகளை விட்டுவிட்டு, இனி வரும் நாள்களில் அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல விரும்புகிறேன்" என்றார். தனது பயிற்சியாளர் பாப் பெமான் குறித்துப் பேசிய பெல்ப்ஸ், "அவர் இல்லாமல் நான் இங்கு வந்திருக்க முடியாது. சாதித்திருக்கவும் முடியாது. சாகும்வரை அவரை மறக்கமாட்டேன்" என்றார்.

2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் முதல்முறையாக பங்கேற்ற அவர், அதில் 6 தங்கம், 2 வெண்கலம் என 8 பதக்கங்களை வென்றார்.

அதைத் தொடர்ந்து 2008 பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் தான் பங்கேற்ற 8 பிரிவுகளிலும் தங்கம் வென்று ஒரே ஒலிம்பிக்கில் அதிக பதக் கங்களை வென்றவர் என்ற சாத னையைப் படைத்தார்.

இந்த ஒலிம்பிக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 4ஒ200 மீ. ப்ரீஸ்டைல் போட்டியில் தங்கம் வென்றதன் மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் அதிக பதக்கங்கள் (19 பதக்கங்கள்) வென்றவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரரனார்.

முன்னதாக சோவியத் யூனியன் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை லாரிசா லத்தினா ஒட்டுமொத்தமாக 18 பதக்கங்களை வென்றதே சாதனையாக இருந்தது. 48 ஆண்டு காலமாக நீடித்த அந்த சாதனையை 19ஆவது பதக்கத்தை வென்றதன் மூலம் பெல்ப்ஸ் முறியடித்தார்.

இந்த நிலையில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற 400 மீ. மெட்லி தொடர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்று நீச்சலுக்கு விடை கொடுத்திருக்கிறார் பெல்ப்ஸ்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் மட்டும் அவர் 4 தங்கம், 2 வெள்ளி என மொத்தம் 6 பதக்கங்களை வென்றுள்ளார். இதன்மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் 22 பதக்கங்களை வென்ற ஒரே வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார் பெல்ப்ஸ்.

இதில் 18 தங்கப் பதக் கங்கள், 2 வெள்ளி, 2 வெண் கலப் பதக்கங்கள் அடங்கும்.

ஒலிம்பிக்கில் அதிக பதக்கங்கள் வென்றவர் மட்டுமல்ல, அதிக தங்கப் பதக்கங்கள் வென்றவர், தனி நபர் பிரிவில் அதிக தங்கப் பதக்கங்கள் (11) வென்றவர் போன்ற சாதனைகளும் தங்க மகன் பெல்ப்ஸ் வசமே உள்ளது. ஒலிம்பிக்கில் மட்டுமல்லாது, உலக சாம்பியன்ஷிப், பான் பசிபிக் சாம்பியன்ஷிப், அமெரிக்க சாம்பியன்ஷிப் என ஏராளமான போட்டிகளில் சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளதோடு, உலக சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளார் பெல்ப்ஸ்.


16 பதக்கங்கள் வென்ற லாரிஸாவின் சாதனையை 48 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்த இந்த பெல்ப்ஸின் சாதனையை முறியடிப்பது யாரோ? அது சாத்தியமா என்பதற்கு காலம்தான் பதில் சொல்லும்!

# பதக்கப் பட்டியல்

லண்டனில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் சீனா இழந்த முதலிடத்தை மீண்டும் கைப்பற்றியது. போட்டியை நடத்திவரும் இங்கிலாந்தும் தற்போது முன்னிலை பெற்று வருகிறது. நேற்று இரவு 10 மணி-வரையான முன்னிலை வகிக்கும் முதல் 20 நாடுகள் வெல்லப்பட்ட பதக்க பட்டியல் வருமாறு:-

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 31 | 19 | 14 | 64 |
| 2 | ஐ.அமெரிக்கா | 28 | 14 | 19 | 61 |
| 3 | பிரித்தானியா | 16 | 11 | 11 | 38 |
| 4 | தென் கொரியா | 11 | 5 | 6 | 22 |
| 5 | பிரான்ஸ் | 8 | 8 | 9 | 25 |
| 6 | இத்தாலி | 7 | 5 | 4 | 16 |
| 7 | கஸகஸ்தான் | 6 | 0 | 0 | 6 |
| 8 | ரஷ்யா | 5 | 17 | 15 | 37 |
| 9 | ஜேர்மனி | 5 | 10 | 7 | 22 |
| 10 | ஹங்கேரி | 4 | 1 | 3 | 8 |
| 11 | வடகொரியா | 4 | 0 | 1 | 5 |
| 12 | நெதர்லாந்து | 3 | 2 | 4 | 9 |
| 13 | தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 4 |
| 14 | நியுசிலாந்து | 3 | 0 | 4 | 7 |
| 15 | ஜப்பான் | 2 | 12 | 13 | 27 |
| 16 | டென்மார்க் | 2 | 4 | 2 | 8 |
| 17 | ரோமானியா | 2 | 4 | 2 | 8 |
| 18 | பேலருஸ் | 2 | 4 | 3 | 7 |
| 19 | கியூபா | 2 | 2 | 1 | 5 |
| 20 | பிரேசில் | 2 | 1 | 5 | 8 |

# வேகநடை: மயங்கினார் வீரர்



20 கி.மீ. நடைப் பந்தயத்தில் சீன வீரர் சென் டிங் தங்கப்பதக்கம் வென்றார். ஆனால், இப்போட்டியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரஷ்ய வீரரும், ஒலிம்பிக்கிலும், இரண்டு முறை உலக சம்பியன் பட்டம் பெற்றவருமான வாலரி போர்சின், போட்டி முடிவடையும் தூரத்துக்கு 2 கி.மீ.க்கு முன்பாக திடீரென சுருண்டு விழுந்து மயங் கினார். இதனால் ஸ்ட்ரெச்சரில் அவர் மருத்துவமனைக்கு தூக்கிச் செல்லப்பட்டார். இப்போட்டியில், கௌதமாலாவின் எரிக் பாரன்டோ வெள்ளியையும், மற்றொரு சீன வீரர் வாங் ஜென் வெண்கலத் தையும் வென்றனர்.


**ஊக்கமருந்து**

ஆண்கள் 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்ற மொராக்கோ வீரர் அமைன் லாலோ, ஊக்க மருந்து உபயோகித்தது நிரூபணமானதால் ஒலிம்பிக் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

**அசரென்காவுக்கு வெண்கலம்**

மகளிர் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அசரென்கா வெண்கலம் வென்றார். 3வது இடத்துக்கான மோதலில் அவர் ரஷ்யாவின் மரியா கிரிலென்கோவை நேற்று வீழ்த்தினார்.

# சகோதரிகள் 'ஹட்ரிக்' தங்கம்



ஒலிம்பிக் மகளிர் இரட்டையர் ரென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ்-செரீனா வில்லியம்ஸ் சகோதரி கள் ஜோடி தங்கம் வென்றது.

ஞாயிற்றுக் கிழமை நடை-பெற்ற இறுதிச் சுற்றில் இந்த ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செற்களில் செக். குடியரசின் ஆன்ட்ரியா-லூஸி ரடேகா ஜோடியை வீழ்த்தியது.

ஏற்கெனவே 2000, 2008 ஒலிம்பிக் போட்டிகளில் மகளிர் இரட்டையர் பிரிவு போட்டிகளில் தங்கம் வென்றுள்ள இந்த ஜோடி இப்போது 3ஆவது முறையாக தங்கம் வென்றுள்ளது.

இதேபோல் வீனஸ் 2000-லும், செரீனா இந்த ஒலிம்பிக்கிலும் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்றுள்ளனர்.

3 வெவ்வேறு ஒலிம்பிக் டென்னிஸ் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவர்கள் என்ற பெருமையையும் வில்லியம்ஸ் சகோதரிகள் பெற்றுள்ளனர்.

# விகாஸ் கிருஷ்ணன் விவகாரம் நீதிமன்றம் செல்கிறது இந்தியா

விகாஸ் கிரு'ன் விவகாரத்தில் சுவிட்சர்லாந்தில் உள்ள விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதிமன்றத்தை (சிஏஎஸ்) நாடியுள்ளது இந்தியா.

ஒலிம்பிக் 69 கிலோ எடைப் பிரிவு குத்துச்சண்டை காலிறுதிக்கு முந்தைய போட்டியில் இந்தியாவின் விகாஸ் கிரு'னும், அமெரிக்காவின் இரோல் ஸ்பென்ஸம் மோதினர். ஆட்டத்தின் முடிவில் 13-11 என்ற கணக்கில் விகாஸ் கிருஷன் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் போட்டியின்போது விகாஸ் செய்த சில தவறுகளை நடுவர் கணக்கில் எடுக்கவில்லை என்று அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இரோலுக்கு மேலும் 4 புள்ளிகள் வழங்கப்பட்டு அவர் 15-13 என்ற கணக்கில் வெற்றி கண்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் அதிர்ச்சியடைந்த இந்தியா, சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்திடம் (ஏஐபிஏ) மேல் முறையீடு செய்தது. ஆனால் இந்தியாவின் கோரிக்கையை ஏஐபிஏ நிராகரித்துவிட்டது.

இதையடுத்து ஏஐபிஏவின் முடிவை எதிர்த்து ஸ்விட்சர்லாந்தில் உள்ள விளையாட்டுக்கான மத்தியஸ்த நீதிமன்றத்தில் இந்தியா சார்பில் சனிக்கிழமை மேல் முறையீடு செய்யப்பட்டது.

இதுதொடர்பாக ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய விளையாட்டுக் குழு தலைவர் (பொறுப்பு) முரளிதரன் ராஜா கூறுகையில், "விகாசுக்கு எதிராக ஏஐபிஏ முடிவை மாற்றி அறிவித்ததை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அதுதொடர்பாக சிஏஎஸ் பொதுச் செயலர் மேத்யூ ரீபுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டு முடிவு மாற்றி அறிவிக்கப்பட்டது.

அதேநேரத்தில் ஸ்பென்ஸ் 2 மற்றும் 4-வது சுற்றுகளில் தவறு செய்தார் என்ற இந்தியத் தரப்பு நிலைப்பாட்டை ஏஐபிஏ ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியுள்ளோம். 69 கிலோ எடை காலிறுதிப் போட்டிக்கான எடை சரிபார்த்தல் மற்றும் மருத்துவ பரிசோதனை வரும் 7ஆம் தேதி நடைபெறுகிறது" என்றார்.

# பழி தீர்த்தார் முர்ரே



ஒலிம்பிக் ஆடவர் ஒற்றையர் ரென்னிஸ் போட்டியில் பிரிட்டனின் ஆன்டி முர்ரே தங்கம் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிச் சுற்றில் முர்ரே 6-2, 6-1, 6-4 என்ற நேர் செற்களில் முதல் நிலை வீரரான சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரரை வீழ்த்தினார்.

இதன்மூலம் "கேரியர் கோல்டன் ஸ்லாம்" வாய்பை இழந்தார் ரோஜர் ஃபெடரர். 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகள் மற்றும் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே "கேரியர் கோல்டன் ஸ்லாம்" ஆகும். சமீபத்தில் முடிந்த விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் போட்டியில் இதே ஆல் இங்கிலாந்து கிளப்பில் ஃபெடரரிடம் தோல்வி கண்ட முர்ரே, இந்த வெற்றியின் மூலம் ஆறுதல் தேடிக்கொண்டார்.

ஜெகோவிச்சுக்கு அதிர்ச்சி: வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவின் ஜுவன் மார்ட்டின் 7-5, 6-4 நேர் செட்களில் இரண்டாம் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜெகோவிச்சை வீழ்த்தினார்.

# ரென்னிஸ் வெண்கலம் பிரைன் சகோதரர்களிடம்

ஒலிம்பிக் ஆடவர் இரட்டையர் பிரிவு ரென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் பாப் பிரையன்-மைக் பிரையன் சகோதரர்கள் ஜோடி தங்கம் வென்றது.

சனிக்கிழமை இரவு நடைபெற்ற இறுதிச் சுற்றில் பிரையன் சகோதரர்கள் 6-4, 7-6 (2) என்ற நேர் செற்களில் பிரான்ஸின் ஜோ-வில்பிரைட் சோங்கா-மைக்கேல் லோட்ரா ஜோடியை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் முதல் செட்டின் முதல் கேமிலேயே பிரான்ஸ் ஜோடியின் சர்வீஸ முறியடித்த பிரையன் சகோதரர்கள், 10-வது கேமில் முதல் செட்டை முடிவுக்கு கொண்டு வந்தனர். இந்த செற்றை அவர்கள் 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினர்.

பின்னர் நடைபெற்ற 2-வது செட்டில் பிரான்ஸ் ஜோடி கடுமையாகப் போராடியதால் இந்த செட் 6-6 என்ற கணக்கில் சமநிலையில் முடியவே, ஆட்டம் டை பிரேக்கருக்கு சென்றது. இதை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட பிரையன் சகோதரர்கள் 7-2 என்ற கணக்கில் வென்றனர். இதன்மூலம் அவர்கள் தங்கப் பதக்கத்தை வென்றனர்.

காஸ்கட்-பென்னாட்டாவுக்கு வெண்கலம்: வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் பிரான்ஸின் ரிச்சர்டு காஸ்கட்-ஜூலியன் பென்னட்டா ஜோடி 7-6, 6-2 என்ற நேர் செற்களில் ஸ்பெயினின் டேவிட் ஃபெரர்-ஃபெலிஸியானோ லோபஸ் ஜோடியை வீழ்த்தி வெண்கலம் வென்றது.



இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 07.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது